janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 மார்ச் 03 - மார்ச் 09 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 48






ஓசூர்

## போராடும் விவசாயிகள் மீதான அடக்குமுறைக்கு எதிர்ப்பு

# தொழிலாளர்கள் - விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

**டெல்லி எல்லையில் போராடிக்கொண்டிருக்கும் விவசாயிகள் மீதான அடக்குமுறையை கண்டித்து பிப்ரவரி 23 அன்று மத்திய தொழிற்சங்கங்களும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.**

‘டெல்லி செல்வோம்’ போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள், ஷம்பூ, கண்ணூரி எல்லையில் பிப்ரவரி 21 அன்று தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீது துணை ராணுவமும் காவல்துறையும் சேர்ந்து ரப்பர் குண்டுகளையும் கண்ணீர் புகைக்குண்டுகளையும் கொண்டு தாக்குதல் நடத்தியது. இதில் 200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். சுப்கரன் சிங் என்ற விவசாயி கொல்லப்பட்டார். இவருடன் சேர்த்து ஐந்து விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

### கறுப்புக்கொடியுடன் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக முழக்கம்

ஜனநாயக முறையில் கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் விவசாயிகள் மீது அடக்குமுறைகளை ஏவிவிட்ட ஒன்றிய பாஜக அரசுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். மத்திய தொழிற்சங்கங்களும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் கறுப்பு நாளாக கடைபிடித்ததுடன், பிப்ரவரி 23 அன்று தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டன.

சென்னை, திருவள்ளூர் – தாமரைப்பாக்கம், வேலூர், விருதுநகர், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் உள்ளிட்ட இடங்களில் ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கோவை


சேலம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்


சென்னை




புதுக்கோட்டை


நாமக்கல்

கட்சிக் கடிதம்

# அம்பலப்பட்டு நிற்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் 2



போர்க்குணமிக்க தோழர்களே!

**தனது ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி தன் கட்சிக்கு மட்டுமே ஒரு சாதகமான சூழலை உருவாக்கிக் கொண்டு, பெரும் நிறுவனங்களுக்கு சட்டபூர்வமாக சலுகைகளை வழங்கி, அதற்கு பிரதிபலனாக பல்லாயிரம் கோடி நிதிகளை பெறுவதற்கு சட்டபூர்வமான ஒரு ஏற்பாடு தான் தேர்தல் பத்திரம் திட்டம்.**

நிதிகளை கொடுத்தவர் யார் என்று தெரிந்தால் நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு போய்விடும் என்பதனை அறிந்துள்ள பாஜக, வெளியே தெரியாமல் யாரும் அறியா வண்ணம் மிக, மிக ரகசியமான முறையில் கோடிகளை குவிக்க ஏற்படுத்தப்பட்ட திட்டமே தேர்தல் பத்திரங்கள் திட்டம்.

நாட்டையும், மக்களையும் ஏமாற்றி அரசின் முழு ஆதரவுடன் பெரும் கொள்ளையில் ஈடுபட்டு, தங்கள் பொருளாதாரத்தை நாள்தோறும் பலப்படுத்தி, உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் போட்டி போட்டு இடம் பிடித்து விடும் நபர்களிடம், தன் கட்சிக்கு நன்கொடை பெறுவதற்கான சட்டபூர்வ ஏற்பாடே தேர்தல் பத்திரம் திட்டம். பெரும் நிறுவனங்களின் அதிபர்கள் நாட்டு மக்களிடம் பகிங்கரமாகவும், சட்ட பூர்வமாகவும் கொள்ளை அடிப்பார்கள்.

அந்த நபர்கள் நாட்டு மக்களுக்கு சொந்தமான அரசுடைமையாக உள்ள பொதுத்துறை வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை தங்களின் தொழில் வளர்ச்சிக்காகவும், புதிய, புதிய தொழில்களை நமது நாட்டிலும், அந்நிய நாடுகளிலும் தொடங்கவும் கடன் பெறுவார்கள்.

இப்படிப்பட்ட நபர்கள் எவ்வித சிரமமின்றி, கடன் கேட்டவுடன், கேட்ட தொகை கிடைத்திட ஒன்றிய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.

அல்லல் படாமல், ஓசை இன்றி தாங்கள் கேட்ட கடனை உடனடியாக அவர்களால் பெற முடியும்.

அவ்வாறு பெறப்பட்ட கடன் தொகைக்குரிய அசலையோ அல்லது அதற்குரிய வட்டி தொகையையோ மாதந்தோறும் வங்கிக்கு திரும்ப செலுத்திட வேண்டும் என்கிற சட்ட முறையை மீறுவார்கள். திருப்பி செலுத்திட மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு திருப்பி செலுத்த முடியாமல் அல்ல, வேண்டுமென்றே திருப்பி செலுத்த மாட்டார்கள்.

வாங்கிய கடனை திருப்பி செலுத்த மறுப்பவர்கள் பக்கம் வங்கி நிர்வாகம் திரும்பிக் கூட பார்க்காது.

ஏனெனில் அதன் ரகசியங்கள் அனைத்தையும் வங்கி அதிகாரிகள், கீழிருந்து, மேல் வரை அனைவரும் அறிந்த ஒன்றே!

மாதங்கள், வருடங்கள் உருண்டோடும். பின் அத் தொகை வராக் கடன் பட்டியலில் இடம்பெறும்.

பல ஆயிரம் கோடி ரூபாய்களை கடன் வாங்கியவர் தொழில் தொடங்கி இருப்பார், அது மிக லாபகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆனால், அவர் தான் பெற்ற கடனை திரும்ப செலுத்திட மாட்டார்.

அவரது தொழிலை முடக்கவோ அல்லது தொழில் நிறுவனங்களை கையகப்படுத்தவோ, அவர்களது வங்கிக் கணக்கை முடக்கவோ, கடன் பெற்று திருப்பி செலுத்த மறுக்கும் பெரிய மனிதர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ, எவ்வித சிறு முயற்சிகளையும் கூட வங்கி நிர்வாகமோ அல்லது ஒன்றிய அரசோ மேற்கொள்ளாது.

மேற்கொள்ளாதது மட்டுமல்ல, இவ்வாறு கடன் பெற்று திருப்பி செலுத்த மறுக்கும் புண்ணியவான்கள் யார் என்ற விவரத்தை தெரியப்படுத்துங்கள் என்று நாடாளுமன்றத்தில் கேட்டால் அதற்கு நிதியமைச்சர் கூறும் பதில் என்ன தெரியுமா?

அப்படி எல்லாம் கூற முடியாது. அவர்களது பெயர்களை பகிங்கரமாக கூறக்கூடாது. அவர்கள் எல்லாம் சமூகத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள். அவர்களது பெயரை பகிரங்கப்படுத்துவதன் மூலம் அவர்களது சமூக அந்தஸ்து பாதிக்கப்படும். ஆகவே கூற இயலாது என்று பெரும் விளக்கத்தை அளித்து அனைவரது வாயையும் மூடச் செய்து விடுவார்கள்.

மோசடி செய்த நபர்களை அரசு சட்டபூர்வமாக காப்பாற்றும். அவர்கள் பெற்ற கடனை வராக் கடனாக பல ஆண்டுகள் வங்கி கணக்கு காட்டும், பின்னர் இக்கடன் வராது என்று அவர்கள் பெற்ற கடன் அனைத்தையும் பைசா பாக்கி இன்றி ரத்து செய்யும். தற்போது கடன் பெற்றவர் கடனாளி இல்லை. அதே நபர், மோசடி செய்த நபர், மீண்டும் பல்லாயிரம் கோடி வங்கியில் கடன் பெறுவார்.

இப்படிப்பட்ட மோசடி நபர்கள் ஸ்டேட் பேங்கில் கோடிக்கணக்கில் தேர்தல் பத்திரம் வாங்குவார். அதனை எந்த கட்சிக்கு கொடுப்பார் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?.

தனக்கு பல்லாயிரம் கோடி சலுகை அளித்திட்ட ஒன்றிய ஆளும் கட்சிக்கு வாரி, வாரி தேர்தல் பத்திரங்கள் வழங்குவார். அவ்வாறு வழங்குவதற்கு வகை செய்யப்பட்ட திட்டமே தேர்தல் பத்திர திட்டம்.

நாட்டு மக்கள் அனைவரும் அரசுக்கு வரி செலுத்துகின்றோம். நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் நாம் வாங்குகிற பொருள்கள் அனைத்திற்கும் வரி செலுத்துகின்றோம்.


ஒரு நியாயமான அரசு, மக்களை பற்றி கவலைப் படுகின்ற அரசு, அவர்களின் பால் கருணை காட்டுகிற அரசு என்றால் என்ன செய்ய வேண்டும்?.

ஏழை, எளிய, உழைப்பாளி மக்களுக்கு வரிகளை குறைத்து சலுகை காட்டிட வேண்டும். இவர்களின் வரிகளை குறைத்து, வாரி சுருட்டி வளமோடு இருப்பவர்களுக்கு வரியை உயர்த்தி அரசுக்கான வரியை அதிகரிக்க வேண்டும்.

ஆனால் மோடி அரசு என்ன செய்தது?

எளிய மக்களுக்கு வரி அதிகரித்தது, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரியை குறைத்தது.

அவ்வாறு சலுகை பெற்றவர்கள் ஓசைப்படாமல், தங்களின் கைமாறாக பாஜகவிற்கு நன்கொடை வழங்கிட வகை செய்யப்பட்டதுதான் தேர்தல் பத்திரங்கள் திட்டம்!




இத்தகைய நபர்கள் சட்டப்பூர்வமாக பெற்ற சலுகைக்கு நன்றி கடன் செலுத்த வேண்டாமா?

அந்த நன்றி கடனை நாட்டு மக்களுக்கு சிறிதும் தெரியாமல் செலுத்திட வேண்டாமா?

அவ்வாறு செலுத்திட ஆர்எஸ்எஸ் கும்பலால் கண்டறியப்பட்ட திட்டம் தான் தேர்தல் பத்திரங்கள் திட்டம்.

கடந்த 100 ஆண்டுகளில் நாட்டின் தொழிலாளர்கள் தங்கள் ரத்தத்தை வியர்வையாக்கி உழைத்து, உழைத்து ஓடாகிப் போன தொழிலாளி தங்களுக்கான உரிமைகளை, சட்டங்களை பெறுவதற்காக போராடினான்.

அவனது நியாயமான எந்த ஒரு கோரிக்கைகளையும் எந்த அரசும் ஏற்கவில்லை.

எண்ணற்ற, எழுதி மாளாத சித்திரவதைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு, போராடிப் பெற்ற சலுகைகள், சட்டங்கள், உரிமைகள் அனைத்தையும் அகற்றி, நான்கு சட்ட தொகுப்புகளாக உருவாக்கி, பெரும் முதலாளிகள், நிறுவனங்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தியதுதான் மோடி அரசு.

தொழிலாளரின் வயிற்றில் அடித்து, உள்நாட்டு, வெளிநாட்டு பெரு முதலாளிகள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது தான் தொழிலாளர் சட்டங்களின் தொகுப்பாகும்.

ஒன்றிய அரசிடமிருந்து சட்டபூர்வமாக சலுகை பெற்ற பெரும் முதலாளிகள், நன்றி கடன் செலுத்திட வேண்டாமா?

அத்தகைய நன்றிக்கடன் செலுத்திட ஆர்.எஸ்.எஸ். கும்பலால் கண்டறியப்பட்டதே தேர்தல் பத்திரங்கள் .

தொடரும்...

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்




**போராடிய உழைக்கும் மக்கள் மீது தடியடி நடத்தினார்கள். அவர்களது மண்டையை உடைத்தார்கள். முழக்கம் எழுப்பியவனை சுட்டுத் தள்ளினார்கள். தூக்குக் கயிறு கொண்டு அவனது குரல்வலையை இறுகச் செய்து சாகடித்தார்கள். ஆயிரக்கணக்கில் சிறை கொட்டடியில் அடைத்து சித்ரவதை செய்தார்கள். தலைக்கு விலை பேசினார்கள். நாடு கடத்தினார்கள்.**



நமது வீட்டு குழந்தைகள் வாங்கும் நோட்புக், பென்சில், பேனா, அழிக்கும் ரப்பர் என அனைத்திற்கும் வரி செலுத்துகின்றோம். வீடு சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தும் தொடப்பத்துக்கும் வரி செலுத்துகிறோம். ஏழை, எளிய மக்கள் தங்கள் வீடுகளில் பயன்படுத்தும் அலுமினிய பாத்திரங்களுக்கும் வரி செலுத்துகிறோம்.

அத்தியவாசிய பண்டங்கள், உணவுப் பொருட்கள், ஆடைகள் என அனைத்திற்கும் வரி செலுத்துகிறோம். உணவகங்களுக்கு சென்று சாப்பிட்டால், டீ குடித்தால், காபி குடித்தால் வரி செலுத்துகின்றோம்.

# தேர்தல் ஆணையத்திடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முறையீடுகள்




இந்திய தலைமை தேர்தல் ஆணையர் மற்ற தேர்தல் ஆணையர்களுடன் தமிழ்நாட்டுக்கு வந்து அரசியல் கட்சிகளை 23.2.2024 அன்று சந்தித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆணையர்களை நேரில் சந்தித்து கட்சியின் கருத்துக்களை முன் வைத்தார். அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. மக்களவைத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு முழுவதும் மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும்.

3.வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்கள், பணம் வழங்குவது தடுக்கப்பட வேண்டும். அதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

4. தமிழ்நாடு முழுமையில் தடங்கல் இன்றி எளிதில் வாக்காளர்கள் சென்று வாக்கு செலுத்துவதற்கு, அதிகத் தொலைவு இல்லாத வகையில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டும்.

5.பதட்டமான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து, அங்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மதம், மத நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தேர்தல் பரப்பரை செய்வது தடை செய்யப்பட வேண்டும். மத ஒற்றுமையை சீர்குலைக்கிற அல்லது மதக் கலவரங்களைத் தூண்டுகிற எந்த ஒரு நிகழ்வும் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

7. கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் இதர வழிபாட்டுத் தலங்களில் நேரடி வாக்கு சேகரிப்பு தடை செய்யப்பட வேண்டும்.

8. வாக்குப்பதிவு எந்திரங்களின் பயன்பாடு குறித்து கடுமையான சந்தேகங்களும், அதிருப்தியும் உருவாகியுள்ளது. எனவே அவை வாக்குச் சீட்டுகள், வாக்குப்பெட்டி மூலம் தேர்தல் நடத்தப்பட வேண்டும். வாக்குப் பதிவு எந்திரங்கள் மூலம் தான் தேர்தல் என்பதில் இந்திய தேர்தல் ஆணையம் உறுதியாக இருக்குமேயானால், விவிபேட் எந்திரத்தில் இருந்து வெளிவரும் வாக்களிக்கப்பட்ட சின்னங்கள் அடங்கிய சீட்டு, வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். விவிபேட் அச்சிடப்பட்ட வாக்குகளும், வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் சரியாக ஒத்துப் போகின்றனவா என்பது சோதிக்கப்பட வேண்டும்.

9. அஞ்சல் வழியாக செலுத்தும் வாக்கு வசதி, அனைத்து மருத்துவர்கள், முதுநிலை பட்ட மருத்துவ மாணவர்கள், செவிலியர் மாணவர்கள், செவிலியர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, அவர்களது வாக்கு செலுத்தும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. கடுமையான கோடைகாலத்தில் தேர்தல் நடத்தப்படுவதால், வாக்குச்சாவடிகளில் குடிநீரும் அமர்வதற்கான நாற்காலிகளும் வைக்கப்பட வேண்டும். அது போலவே வாக்களிக்க வரிசையில் நிற்கும் போது வெயில் படாமல் இருக்க ஷாமியானா பந்தல் உள்ளிட்டவை நிறுவப்பட்டு நிழல் கிடைப்பது உறுதி செய்ய வேண்டும்.

11. தேர்தல் காலத்தில், அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தங்களுடைய கொடியை அகற்ற வேண்டும் என வற்புறுத்தக் கூடாது. அதேபோல தலைவர்களின் சிலைகளை துணி கொண்டு மூடி மறைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்

12. ஒரு நாடு ஒரு தேர்தல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் மாநில உரிமைகளுக்கும் எதிரானதாகும். ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதைத் திணிப்பது கைவிடப்பட வேண்டும்

13. தேர்தல் சீர்திருத்தங்கள் சம்பந்தமான இந்திரஜித் குப்தா கமிட்டியின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

# இளம் விவசாயி சுப்கரன் சிங் படுகொலை

## நீதி விசாரணை கோரி மகா பஞ்சாயத்து தொழிற்சங்கங்கள் ஆதரவு

ஐக்கிய விவசாயிகள் முன்னணி (SKM) மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைசார் சம்மேளனங்கள், /சங்கங்களின் கூட்டமைப்பு 26 பிப்ரவரி 2024 அன்று நடைபெற்றது. பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கை வருமாறு:

ஐக்கிய விவசாயிகள் முன்னணி (எஸ்கேஎம்) டெல்லி ராம்லீலா மைதானத்தில் மார்ச் 14ம் தேதி மஹாபஞ் சாயத்து நடத்த விடுத்துள்ள அழைப்புக்கு மத்திய தொழிற்சங்கங்கள், தங்கள் ஆதரவை தெரிவிக்கின்றன.

இளம் விவசாயி கொலை செய்யப்பட்டதற்கு மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆகியவை நீதி விசாரணையை கோருகின்றன.

“தொழிலாளர் விரோதி, விவசாயிகளின் விரோதி, தேச விரோதி மோடி ஆட்சியை அகற்றுவோம்“ என்ற முழக்கத்துடன் மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி இணைந்து நாடு தழுவிய அளவில் பிப்ரவரி 16 அன்று வேலைநிறுத்தம் மற்றும் கிராமீன் பாரத் பந்த் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இப்போராட்டம் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கவனம் பெற்றது குறித்து கூட்டம் திருப்தி தெரிவித்தது. சமூகத்தின் இதர வெகுமக்கள் அமைப்புகள் ஆதரவு தந்து, பங்கேற்றதற்கு நன்றி தெரிவிக்கிறோம்.

பஞ்சாபின் ஷம்பு மற்றும் கானவ்ரி எல்லைகளில் போராட்டம் நடத்திய விவசாயிகளுக்கு எதிராக ஒன்றிய, அரியானா பாஜக அரசுகளின் மிருகத்தனமான அடக்குமுறைகளால் இளம் விவசாயி சுப்கரன் சிங் உயிரிழந்தார்.

தண்ணீர் பீரங்கிகள் மூலம் தண்ணீருடன் பிளாஸ்டிக் துகள்கள், உலோகத் துகள்களும் கலந்து பயன்படுத்தப்பட்டது வருந்தத்தக்கது. உணவு உற்பத்தியாளர்களான அன்னதாதாக்களின் உண்மையான கோரிக்கைகளுக்காக ட்ரோன்களைப் பயன்படுத்துவது மிகவும் காட்டுமிராண்டித்தனமானது.

அதுமட்டுமின்றி, பஞ்சாப் எல்லைக்குள் சென்ற படைகள் விவசாயிகளின் 50க்கும் மேற்பட்ட டிராக்டர்கள் மற்றும் வாகனங்களை சேதப்படுத்தியதுடன், விவசாயிகளையும் இழுத்துச் சென்றனர். பஞ்சாப் மாநிலத்திற்குள், துணை ராணுவமும், பிற மாநில காவல்துறையும் நுழைந்து அடக்குமுறை நடவடிக்கை எடுத்தது கூட்டாட்சி அமைப்பையும், மாநில அரசுகளின் இறையாண்மை உரிமைகளையும் மீறியது.

இளம் விவசாயியின் கொலையை விசாரித்து, IPC 302, பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யுமாறும், குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்குமாறும் விவசா யிகளின் டிராக்டர்கள் மற்றும் வாகனங்களுக்கு ஏற்பட்ட பெரும் சேதத்திற்கு இழப்பீடு வழங்குமாறும் விவசாயி தொழிலாளி கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

இந்த கோரிக்கைகளுக்காக மார்ச் 14 ஆம் தேதி டெல்லி ராம்லீலா மைதானத்தில் எஸ்.கே.எம். நடத்தும் மகாபஞ்சாயத்து நிகழ்வுக்கு மத்திய தொழிற்சங்கங்கள் தங்கள் உறுதியான ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கின்றன.

தேசத்தைக் காப்போம், மக்களைக் காப்போம், தொழிலாளர் விரோத, விவசாயி விரோத, தேச விரோத ஆட்சியை அகற்றுவோம்.

இவ்வாறு ஐக்கிய விவசாயிகள் முன்னணி (SKM) மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள், துறைசார் சம்மேளனங்கள்/ சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

### சேலம்

சேலம் கோட்டை மைதானத்தில், மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பாக நடைபெற்ற கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திற்கு செல்வராஜ் தாங்கினார். இதில் ஏ.ராமமூர்த்தி, சந்திரமோகன், அரங்க.சங்கரய்யா, வழக்கறிஞர் கோவிந்தன், நடராஜன், பி.தங்கவேலு, கிருஷ்ணமூர்த்தி, முருகன், கருப்பண்ணன், வேல்முருகன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும், தொழிலாளர்களும் கறுப்புக்கொடிகளுடன் பங்கேற்றனர்.


விருதுநகர்

### நாமக்கல்

நாமக்கல்லில் பிப்ரவரி 23 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விவசா யிகள் சங்கத்தைச் சேர்ந்த ஏ.ஆதிநாராயணன் தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன் மற்றும் க.அன்புமணி, என்.செல்வராஜ், ஐ.ராயப்பன், எஸ்.ராமகிருஷ்ணன், எஸ்.சுகுமார், பெருமாள் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.


மயிலாடுதுறை



வேலூர்

### விருதுநகர்

விருதுநகர் பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தொமுச மாவட்டத் தலைவர் மாடசாமி தலைமை வகித்தார். ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம், சிஐடியு தேவா, ஐக்கிய விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த முருகன் ஆகியோர் உரையாற்றினர்.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தொ.மு.ச மாவட்டச் செயலாளர் கி.கணபதி தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாவட்ட தலைவர் உ.அரசப்பன், கே.ஆர்.தர்மராஜன், வீ.சிங்கமுத்து, சிஐடியுவை சேர்ந்த க.முகமது அலி ஜின்னா, பாலசுப்பிரமணியன், ஐக்கிய விவசாயிகள் முன்னணி மு.மாதவன், க.சுந்தரராஜன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

### தென்காசி

சிவகிரியில் பிப்ரவரி 23 அன்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் சுப்பையா கண்டன உரையாற்றினார்.

### கோவை

கோவை மத்திய தந்தி அலுவலகம் அருகே பிப்ரவரி 26 அன்று மத்திய தொழிற்சங்கங்கள் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எச்.எம்.எஸ் அமைப்பின் மாவட்ட பொதுச்செயலாளர் டி.எஸ்.ராஜாமணி தலைமை தாங்கினார். ஏ.ஐ.டி.யூ.சி மாநில துணைத்தலைவர் எம்.ஆறுமுகம் முன்னாள் எம்.எல்.ஏ., கே.எம்.செல்வராஜ், சி.தங்கவேல், சி.ஐ.டி.யூ. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, எல்.பி.எப். வணங்காமுடி, ஐ.என்.டி.யூ.சி. பி.சண்முகம் எம்.எல்.எப். தியாகராஜன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ■

## வினாடி - வினா

1 சிங்காரவேலர் நடத்திய ஆங்கிலப் பத்திரிகையின் பெயர் என்ன?


2 மொகஞ்சதாரோவில் காணப்பட்ட மிகப்பெரிய கட்டட அமைப்பு எது?

3 ஒரு குவிண்டாலுக்கு எத்தனை கிலோ?

4 புற ஊதாக் கதிர்களை உறிஞ்சுவது எது?

5 தமிழ்நாட்டில் முக்கடல்களும் சந்திக்கும் இடத்தின் பெயர் என்ன?

6 பனிக்கட்டி நீராக மாறும் நிகழ்வுக்குப் பெயர் என்ன?



விடைகள் 12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 48

# சாவியைத் தொலைத்த மோடியின் பூட்டு!

என் தங்கம் என் உரிமை என்று ஒரு நகைக்கடை விளம்பரம். அதை நகலெடுத்துக் கொண்டு நடைபயணம் என்ற பெயரில் நடத்தப்பட்ட டயர் பயணம் முடிவுக்கு வந்திருக்கிறது.

அதற்கு மோடியே நேரில் வந்து, இந்தியாவை மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரமாக்குவேன், நாட்டில் ஏழ்மையையும் ஊழலையும் ஒழிப்பேன், இது மோடியின் உத்தரவாதம் என்ற சாயம் போன முழக்கத்தை முன் வைத்தார்.

ஏழரை லட்சம் கோடி ரூபாய் முறைகேடு என சிஏஜி அறிக்கை; நன்மை கருதி வழங்கப்பட்ட தொகை எனத் தேர்தல் பத்திர வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு; பிஎம் கேர்ஸ் நிதிக்கு கணக்கு காட்ட மாட்டேன் என்று அடம். யார் நம்புவார் மோடியின் உத்தரவாதத்தை?

வளர்ச்சி அரசியலை வடிவமைப்பதிலும், நாட்டின் முன்னேற்றத்திற்கான அத்தியாயத்தை உருவாக்குவதிலும், தமிழ்நாடு முக்கிய இடம் வகிக்கிறது; ஆனால் இந்தியா கூட்டணி தமிழ்நாட்டை பின்னுக்குத் தள்ளுகிறது என்று மோடி சொன்னார்.

தமிழ்நாடு எப்போதுமே முன்வரிசை மாநிலம் தான். ஆனால், ஜனா கிருஷ்ணமூர்த்தியிலிருந்து, தமிழிசை சௌந்தர்ராஜன் வரை இங்கே முதலமைச்சராக ஆட்சி நடத்தினார்கள் என்று யாரோ அவருக்கு சொல்லிவிட்டார் போல!

காங்கிரஸ் இல்லாத, கழகங்கள் இல்லாத, என்றெல்லாம் கனவு காண்கிறார்களே! அவை தான் தமிழ்நாட்டைக் கட்டி வளர்த்தன.

அம்மா ஜெயலலிதா தமிழ்நாட்டுக்காக தன்னையே அர்ப்பணித்தவர் என்று புகழ்ந்து தள்ளினார். இதைக் கேட்டு அதிமுக தொண்டர்கள் எல்லாம் இவர்களுக்கு ஓட்டு போட்டு விடுவார்களாம்!

என் மனைவி 100 ஜெயலலிதாவுக்கு சமம், என் அம்மா ஆயிரம் ஜெயலலிதாவுக்கு சமம் என்று சொன்ன அண்ணாமலை பக்கத்தில் இருந்தார்.

மோடியா, இந்த லேடியா என்று 'அம்மா'வே விடுத்த சவாலை அவர் அறிந்ததில்லையோ! ஆனால் அதிமுகவின் அடிமட்டத் தொண்டர்கள் இவற்றை அறிவார்கள்.

ஆயுதம் வாங்குவதில் காங்கிரஸ் ஊழல் செய்ததாம்; ராணுவ தொழிற்சாலைகளை வளர்க்கவில்லையாம், மோடி சொன்னார்.

பிரான்ஸ் நாட்டிடம் இருந்து ரஃபேல் போர் விமானத்தை ஒரு விமானம் 526.1 கோடி ரூபாய் வீதம் காங்கிரஸ் பேசி வைக்க, மோடி ஆட்சிக்கு வந்ததும் அனில் அம்பானி வழியாக ஒன்று 1570.8 கோடி ரூபாய் வீதம் வாங்கிய ஊழல் கதை சந்தி சிரித்ததே!

இந்திய அரசுக்கு சொந்தமாக 41 ராணுவ தொழிற்சாலைகள் உள்ளன. இப்போது, அதானியின் தனியார் தொழிற்சாலையில், வெடிமருந்து, குண்டுகள், ஏவுகணை தயாரிக்க பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி தந்ததுதான் மோடியின் சாதனை.

இந்தியா கூட்டணியை டெல்லியில் வைத்து பூட்டிவிட்டாராம். ஆனாலும் தமிழ்நாட்டில் கடை திறந்து உயிரோடு இருப்பதற்கு அது முயற்சிக்கிறதாம். அதைப் பூட்டுவதற்கு தான் அண்ணாமலை யாத்திரை சென்றாராம். மோடி பேசினார்.

எதிர்க்கட்சியே இல்லாமல் ஒழித்து, தான் சர்வாதிகாரியாக வேண்டும் என்பது அவர் விருப்பம். பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது. வர்த்தக சூதாடிகளின் கட்சி அல்லவா? அதனால் தான் கடை, வியாபாரம், பூட்டு என்று தானாய் வருகிறது. அண்ணாமலையின் பயணம் தான் பூட்டாம்.

மோடியை வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் 39 தொகுதிகளையும் பாஜக கூட்டணி தான் வெல்லும் என்று முழங்கி இருக்கிறார் அண்ணாமலை.

அண்ணாமலை பெருந்துநடை பயணத்தை ராமேஸ்வரத்தில் அமித்ஷா தொடங்கி வைத்தார். மேடையில் பெயர் தெரிந்த கட்சிகளான அதிமுக, தேமுதிக பிரதிநிதிகள் இருந்தனர். அது முடியும் கூட்டத்தில், மோடியே வந்தும் அவற்றைப் பல்லடத்தில் காணோம்.

அதேபோல, கோவையில் மோடி முன்னிலையில் பல்லாயிரக்கணக்கானோர் வந்து சேரப் போவதாக பத்திரிகையாளர்களுக்குச் சொல்லி கூட்டமெல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு ஈ, காக்கா வரக்காணோம்.

தமிழ்நாட்டு மக்கள் தூய்மையான உள்ளம் கொண்டவர்கள், புத்திசாலிகள் என்று தமிழர்களைக் குளிர்விப்பதாக நினைத்துக் கொண்டு மோடி சொன்னார்.

அவர் பேசியதில், அது மட்டுமே உண்மை என்பதை தமிழ்நாட்டு மக்கள் ஏற்கனவே நிரூபித்திருக்கிறார்கள். இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் 39 தொகுதிகளிலும் பாஜகவைத் தோற்கடித்து, மறுபடியும் நிரூபிப்பார்கள்.

# ஆழ்ந்த இரங்கல்: வரலாற்று நாயகன் ஆரொன் புஷ்னெல்





அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த ஆரொன் புஷ்னெல்லுக்கு (Aaron Bushnell) வயது 25. வாஷிங்டனிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தின் முன்பாக, 'பாலஸ்தீனத்தை விடுவிக்க வேண்டும். நான் இனியும் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருக்கமாட்டேன்' என்று கூறியவாறே தீக்குளித்தார்.

காயங்களுடன் மருத்துவ நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் மரணமடைந்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் உண்மையான வரலாற்று நாயகன். வரலாற்றில் எப்போதும் அதன் சரியான பக்கத்தில் நின்ற ஒரு மனித உரிமைப்போராளியாக நினைவு கூறப்படுவார். காசாவில் நடக்கும் இனப்படுகொலைக்கு உடந்தையாகவிருக்கும் மேற்கு நாட்டின் தலைவர்கள் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். அவர்கள் அனைவரும் வரலாற்றின் இருண்ட பக்கத்தில் வைக்கப்படுவார்கள்.

### இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு சிறை

# ஒன்றிய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும்

◆ இரா.முத்தரசன் வலியுறுத்தல்

இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு சிறை ஒன்றிய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தல்


கடலில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தும் அட்டூழியமும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதித்து வருகிறது. இந்த நிலையில் கடந்த வாரத்தில் இலங்கை நீதிமன்றம் மூன்று மீனவர்களுக்கு சிறை தண்டனை விதித்துள்ளது. இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழக மீனவர் சமூகத்தில் கடுமையான கொந்தளிப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. **ராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகை போராட்டம் அறிவிக்கப்பட்டு, ஆட்சியர் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

**ஒன்றிய அரசிடம் இருந்து நம்பிக்கை அளிக்கும் செய்தி ஏதும் கிடைக்காத நிலையில் கச்சத்தீவில் நடைபெறும் புனித அந்தோணியார் திருவிழாவை புறக்கணிக்க வேண்டிய தீவிர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.** மீனவர்களின் உணர்வை பிரதிபலிக்கும் முறையிலும், இலங்கை அரசிற்கு கண்டனம் தெரிவிக்கும் முறையிலும், மீனவர்கள் போராட்டத்துக்கு, அருட்திரு பங்கு தந்தையும் ஆதரவு தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மீனவர்கள் ஒட்டு மொத்தமாக போராட்டக் களம் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசின் கவனத்துக்கு சுட்டிக் காட்டுவதுடன் உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையில் சிறை தண்டனை பெற்றுள்ள மீனவர்கள் உட்பட இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவித்து, நாடு திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பன்சாரே படுகொலையை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்திடுக

◆ பினாய் விஸ்வம் எம்.பி. கடிதம்



கோவிந்த் பன்சாரேவின் படுகொலையை விசாரிக்கச் சிறப்புப் புலனாய்வுக் குழு ஏற்படுத்துமாறு மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. கடிதம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கோவிந்த் பன்சாரே, தனது தீவிரச் செயல்பாடு மற்றும் அறிவாற்றலுக்காக மராட்டிய மாநிலம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர். வகுப்புவாதம் மற்றும் சத்ரபதி சிவாஜி மகாராஜ் அவர்களின், அனைவரையும் இணைத்த பாரம்பரியம் குறித்து அவர் எழுதிய நூல்கள் மகாராஷ்டிராவின் ஒவ்வொரு குடும்பங்களிலும் ஓர் அங்கமாக இடம் பெற்றன. ஓர் எழுத்தாளர் என்பதைத் தவிரவும் கோவிந்த் பன்சாரே மக்களுக்காக உடன் நின்ற சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார். மராட்டிய இயக்கம், கோவா விடுதலைப் போராட்டம் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்காக அவரது தீவிரச் செயல்பாடு மற்றும் பகுத்தறிவுச் சிந்தனைகள் மறக்க முடியாதவை.

இந்தியாவின் மிகக் கொடூரமான அரசியல் பயங்கரவாதச் செயல்களில் ஒன்றான அந்தப் படுகொலை மீது மகாராஷ்டிரா அரசு விசாரணை நடத்தும் முறை குறித்துக் கடிதத்தில் பினாய் விஸ்வம் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். உயிர்பலி ஆகி 10 ஆண்டுகள் கடந்த பிறகும் அவரைப் படுகொலை செய்த குற்றவாளிகள் பிடிபடாமல் சுதந்திரமாக உலாவுகிறார்கள் என்பது வெட்கக் கேடான விஷயம். முழுமையான முறையான விசாரணை நடத்துவதில் காவல் துறை முற்றாகத் தோல்வி அடைந்துள்ளது. கோவிந்த் பன்சாரேவின் படுகொலையை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விரைவு நீதி விசாரணை நடத்துவது மட்டுமே சட்டம் ஒழுங்கின் மீதான மக்களின் நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்தும் என்று அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# கிராமப்புற பொருளாதாரத்தை அழிக்கும் உலகமயம்
# எங்கே செல்கிறது இந்திய விவசாயம்?



அருண் நெடுஞ்செழியன்

**டெல்லி செல்வோம்! உழவர்களின் போராட்டம் இந்துத்துவ பாசிஸ்ட்டுகளை கிடுகிடுக்க வைத்துள்ளது. உழவர்களை தடுக்க முள்வேலி தடுப்பரண்களை உருவாக்கி அண்டை நாட்டுடனான எல்லைத் தடுப்புகள் போல சொந்த நாட்டு உழு குடிகளை தடுத்து நிறுத்த முயல்கிறது மோடி அரசு.**

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் அவர்களைக் கண்டு மோடி அரசு ஓடி ஒளிவதேன்? (விவசாயிகளின் முக்கிய கோரிக்கையான) எம்.எஸ்.சுவாமிநாதன் ஆணையப் பரிந்துரையை ஏற்று விளைபொருளுக்கான ஆதார விலையை உயர்த்துவதற்கு மோடி அரசு தயங்குவதேன்? கார்ப்பரேட்களின் பல லட்சம் கோடி ரூபாய் வாராக் கடன்களைத் தள்ளுபடி செய்கிற மோடி அரசு, வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய மறுப்பதேன்? இது போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கான விடைகளை தற்போது நடைபெற்றுவருகிற விவசாயிகளின் போராட்டத்தின் ஊடாக கண்டறிய முயல்வது அவசியமாகும்.

இந்த கேள்விகளுக்கான விடைகள் அனைத்தும் உலகமயக் கொள்கையில் இருந்தே தொடங்குகிறது.


### உலகமயமும் சந்தை விரிவாக்கமும்

1950 ஆம் ஆண்டில் 3.8 ட்ரில்லியன் டாலர்களாக இருந்த உலகச் சந்தை 1992 ஆம் ஆண்டில் 18.9 ட்ரில்லியன் டாலர்களாக உயர்ந்தது. அதாவது சுமார் நாற்பது ஆண்டுகளில் ஐந்து மடங்காக பெருகியது. உலகமயம், தாராளமயம், தனியார்மயம் என்ற முதலாளித்துவ பொருளாதார கொள்கையானது, தேசங்களின் எல்லைகளை கடந்து அனைத்து நாடுகளிலும் ஊடுருவியது. உலக நிதியகம், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் உலகமயக் கொள்கைக்கான நிதி மூலதன குவிப்புகளை ஒழுங்குபடுத்தி உலகளாவிய அளவில் சந்தை விரிவாக்கம் செய்ய உதவின. திறந்த சந்தை, திறந்த போட்டி என்பதே உலகமயக் கொள்கையின் மையக் குறிக்கோளாகும்.

இத்தகைய திறந்த சந்தைப் பொருளாதார காலகட்டமே, சமூகத்தின் பொற்காலம் என முதலாளித்துவ ஆதரவு பொருளாதாரவாதிகள் பூரிப்படைந்தனர். ஆனால் நடைமுறையிலோ நிலைமை வேறாக இருந்தது. எந்த நாடுகளில் எல்லாம் உலகமயப் பொருளாதாரம் ஊடுருவியதோ அங்கெல்லாம் வேலை வாய்ப்பின்மை அதிகரிப்பும், ஊழலும், வறுமையும் ஏழை பணக்காரர்கள் வேற்றுமையும் அதிகரித்தன. இந்தியாவும் இதில் விதிவிலக்கல்ல. இந்தியாவின் உலகமயம் ஊடுருவிய காலகட்டத்தில் சிறு குறு நிறுவனங்கள் நலிவடையத் தொடங்கின. பட்டறைத் தொழில்களை பெரும் ஏகபோக கார்ப்பரேட் நிறுவனங்கள் விழுங்கி வளர்ந்தன. பொருளாதாரத்தின் மையமானது, வேளாண்மையில் இருந்து சேவைத் துறை மற்றும் உற்பத்தித் துறை நோக்கி திரும்பியது. உடனடி சந்தைத் தேவைக்கும் லாபத்திற்கும் வேளாண் துறை ஈடுகொடுக்க இயலாததால், தொழில்துறை மற்றும் சேவைத் துறையை முதலாளித்துவ வர்க்கம் தேர்ந்தெடுத்தது. இந்தியாவில் இந்த காலகட்டத்தில் தான் அதானி, அம்பானி போன்ற புதிய ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் உருவாக்கி வளர்ந்தனர். இந்தியாவில் உலகமயம் வேகமாக ஊடுருவிய கடந்த இருபது ஆண்டுகளில் சாமானியர்களின் வாழ்க்கை மேலும் நெருக்கடியானது. சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் கேள்விக்குறியானது.

### உலகமய காலகட்டத்தில் கார்பரேட் மயமாகும் தேர்தல் அரசியல்

இன்று இந்தியாவிலும், ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளிலும் பெரும் கார்ப்பரேட் குழும நிறுவனங்களே நாடாளுமன்றத் தேர்தல் அரசியலை கட்டுப்படுத்துகின்ற சக்திகளாக உள்ளன. தேர்தல் பிரச்சாரம் மற்றும் நிதி செலவுகளுக்கு முதலாளித்துவ அரசியல் கட்சிகள், பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் கோடிக் கணக்கில் நன்கொடை வாங்குகின்றன. பின்னர் அந்த நிறுவனங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப கொள்கைகளை வகுக்கின்றன. இன்று நாடாளுமன்ற ஜனநாயக அரசுகளை பெரும் கார்ப்பரேட் குழுமங்களே போற்றிக் காத்து வருகின்றன. இந்த இடத்தில் உலகமயக் கொள்கைகளுக்கும் நாடாளுமன்ற ஜனநாயக அரசியலுக்கும் பெரும் முரண் உருவாகின்றது.




உலகமயக் கொள்கை நுழைகின்ற நாடுகளில் எல்லாம் ஏற்றத்தாழ்வும் வறுமையும் அதிகரிக்கின்றன. வேளாண்மை சீரழிகிறது. கிராமப்புற பொருளாதாரம் அழிகின்றது. உலகமயக் கொள்கை சமூக அமைப்பிற்கு சற்றும் பொருத்தமற்றவையாக இயங்குவதோடு விளிம்பு நிலை மக்களை மென்மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகமானது சமூக அமைப்பை சார்ந்து இயங்குகிறது. மாறாக உலகமயக் கொள்கையோ திறந்வெளி சந்தை, அதிக லாபம் என்ற முதலாளித்துவ நலன்சார் கொள்கையை சார்ந்து இயங்குகிறது. இந்த சூழலில்தான் சமூக அமைப்பிற்குப் பொருத்தமற்ற கேடு விளைவிக்கிற உலகமயக் கொள்கையை முதலாளித்துவ கட்சிகள் ஆதரித்து அமல்படுத்தி வருகின்றன. உலகமயக் கொள்கையை எப்படியாவது சமூக அமைப்பிற்கு பொருத்தவேண்டும் என முதலாளித்துவ அரசுகள் கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்கின்றன. அதை மாபெரும் வெற்றியாகப் பரப்புரை செய்கின்றன.

நடைமுறையிலோ பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தை செல்லாதவையாக மாற்றியும், அழித்தும் தனது செல்வாக்கை நிலைநிறுத்துகின்றன.

இந்திய மக்கள் தொகையில் சுமார் 48.2 கோடி மக்கள் வேளாண் தொழிலை சார்ந்துள்ளனர். அதாவது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் சரிபாதி மக்கள், வேளாண் தொழிலை நம்பியே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அதே நேரத்தில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் உற்பத்தியின் பங்கு வேகமாக சரிந்து வருகிறது. இந்தியாவில் வறுமையில் வாடுகின்ற மக்களில் 80 விழுக்காட்டு மக்கள் வேளாண் தொழிலை சார்ந்துள்ளனர் என நிதி ஆயோக்கின் முன்னாள் துணைத் தலைவர் அரவிந்த் பனகாரியா தெரிவித்துள்ளார். இந்தியா முழுவதும் அதிகரித்துள்ள விவசாய தற்கொலைகளும் விவசாய திவால் நிலைமையையும் வேளாண் பொருளாதாரத்தின் அழிவையும் முரண்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் ஆட்சியாளர்களுக்கோ விவசாயிகளின் சிக்கல் என்ன? அவர்களின் வாழ்க்கைப்பாடு என்னவாக உள்ளது? விவசாயத் தொழிலாளர்கள் பெறுகிற மாத வருமானம் என்ன? என்பது குறித்தெல்லாம் அக்கறையற்றவர்களாக பதவியில் சுகம் காண்பதிலும் மதவாத அரசியல் செய்து மக்களை பிரித்து ஆள்வதிலுமே அக்கறை காட்டுகின்றனர்.

விவசாய வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என தேர்தல் பரப்புரை மேடைகளில் முழங்கிய மோடி, ஆட்சிக்கு வந்த பிறகு, மூன்று வேளாண் விரோத சட்டங்களை கொண்டு வந்து விவசாயிகளை வஞ்சிக்கத் துணிந்தார். இந்திய வேளாண் துறையை முழுமையாக கார்ப்பரேட் மயமாக்க முயல்கிற பாஜக மோடி அரசுக்கு எதிராக வரலாற்று சிறப்பு மிக்க முற்றுகைப் போராட்டத்தை நடத்திய விவசாயிகள் தற்போது மீண்டும் சாலைக்கு வந்துள்ளனர். விவசாயிகளின் உறுதிமிக்க போராட்டத்திற்கு துணை நிற்போம்.

தொடர்புக்கு: 9842391963

## கார்ப்பரேட்மயமாகும் இந்திய விவசாயம்

அண்மையில் நிதிஆயோக் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில்(GDP) விவசாயத்தின் பங்களிப்பானது 16 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாக சரிந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது. உலகமய சகாப்தமானது, கிராமப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயத்துறையின் உற்பத்தி வீழ்ச்சியையும் நகர்ப்புறம் சார்ந்த மூலதன குவிப்பை அதிகரிக்க வைத்துள்ளதையும் வெளிப்படுத்துகிறது.




மேலும் வேளாண் தொழிலில் கனரக எந்திரங்களின் வருகையானது, வேளாண்மையை சார்ந்துள்ள தொழிலாளர்களை அகற்றியதோடு அவர்களை நகர்ப்புறத்திற்கு புலம்பெயர வித்திட்டது. இந்தச் சிக்கலோடு இடுபொருள் விலையேற்றம் மற்றும் உற்பத்திப் பொருளின் விலை வீழ்ச்சியால் வேளாண் தொழிலின் லாபத்தை சுருக்குவதோடு, விவசாயிகளை விவசாயத்தை விட்டு அப்புறப்படுத்த நிர்பந்திக்கிறது. விவசாயிகள், விவசாயத்தை கைவிடுவது என்பது, நிலத்தை கைவிடுவது என்ற பொருளாகும். இவ்வாறு கைவிடப்படுகிற நிலங்களை மொத்தமாக வாங்குகிற கார்ப்பரேட்கள் பசியையும் பஞ்சத்தையும் மூலதனமாக மாற்றி தங்களது பைகளை நிரப்பத் திட்டமிடுகின்றனர்.

இந்துத்துவ பாசிஸ்ட்கள் கொண்டு வந்த வேளாண் சட்டமானது வேளாண்துறையை கார்பரேட் மயப்படுத்துகிற திட்டத்திற்கு சட்டப்பூர்வ வடிவம் கொடுக்கிறது என்பதே போராடுகிற விவசாயிகளின் முதன்மையான குற்றச்சாட்டாகும்.

பெரும் கார்ப்பரேட் குழுமத்தின் நலன்களின் பேரில் மையப்படுத்தப்படுகிற இந்திய பொருளாதாரம், கிராமப்புறம் மற்றும் சிறு நகர்ப்புறங்கள் சார்ந்து இயங்குகிற் சிறு குறு வியாபாரங்களை நசுக்கிவிடுகிறது. அண்மையில் மோடி அரசு கொண்டு வந்த பண மதிப்பிழப்பு அறிவிப்பும் ஜி.எஸ்.டி நடைமுறையும் சிறு குறு வியாபாரம் செய்வோரை கிட்டத்தட்ட அழித்தே விட்டது. அண்மையில் இந்தியாவின் ஏழு மாநிலங்களில் சுமார் 24.75 லட்சம் டன் கொள்ளளவு திறனில் 66 தானியக் கிடங்குகளைக் கட்டுவதற்கு இந்திய உணவு கழகம் ஒப்பந்தப்புள்ளி கோரியது. எப்படி என்றால் மொத்தமுள்ள 66 தானியக் கிடங்குகளை வெறும் மூன்று ஒப்பந்தங்களாகப் பிரித்து ஒப்பந்தப் புள்ளி கோரியது. இவ்வளவு பெரிய திட்டங்களை சிறு குறு நிறுவனங்கள் ஒப்பந்தங்கள் எடுப்பதற்கு எப்படி முன் வரும்? நடுத்தர வர்க்கத் தொழில் முனைவோர்கள் எவ்வாறு இந்த திட்டத்தை ஏலம் எடுக்க இயலும்? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே!

பெரும் கார்ப்பரேட் குழுமங்கள் தானியக் கிடங்குகளை கட்டுகிற ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக இவ்வாறான ஒப்பந்தக் கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர், வியாபாரிகள் மற்றும் விவசாயிகளை போட்டியில் இருந்து அப்புறப்படுத்திவிட்டால், விளைநிலங்களை எளிதாக கைப்பற்றிவிடலாம் என்பதே கார்ப்பரேட்களின் கணக்கு.

## “எங்கள் மகன்களாலேயே நாங்கள் அடிக்கப்படுகிறோம்”



“இப்படி சாலையில் அமர்ந்து கொண்டு இருப்பதற்கு எங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பரிந்துரையை செயல்படுத்துங்கள். நாங்கள் வீட்டுக்குப் போகிறோம்” என்கிறார் லக்வீர் சிங்.

தடையரண்களுக்கு அந்த பக்கம் ஆள் உயரத் தடிகளோடு காவல்துறை, துணை ராணுவத்தினர் நிற்கின்றனர். அவர்களைப் பார்த்து ஒரு விவசாயி சொன்னார் “எங்கள் மகன்களாலேயே நாங்கள் அடிக்கப்படுகிறோம். அவர்கள் மீது எங்களுக்கு கோபம் இல்லை. மன்னித்து விடுவோம். அவர்கள் தங்களுக்கு இடப்பட்ட ஆணையை நிறைவேற்றுகிறார்கள். ஆணைக்கு இணங்கி கடமையைச் செய்வதனால் அவர்களுக்கும் நாங்கள் உணவு தருவோம்.

ஆனால் எங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள துரோகத்தை ஒருபோதும் மறக்க மாட்டோம்”

## மோடி பதவி விலக வேண்டும் சுப்பிரமணியசாமி அதிரடி



பாஜகவில் இருந்தாலும் பிரதமர் மோடிக்கு எதிராக அடிக்கடி அதிரடி கருத்துக்களை தெரிவித்து வரும், அக்கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி, தற்போது தேர்தல் பத்திரங்களை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ள நிலையில், அதற்கு பொறுப்பேற்று பிரதமர் நரேந்திர மோடி பதவி விலக வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

ஊழலுக்கு எதிராக போராடுவதாக கூறிய பாஜகவின் மிகப்பெரிய ஊழல் இது. இதற்கு பொறுப்பேற்று பிரதமர் நரேந்திர மோடி தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்” என பதிவிட்டுள்ளார்.

## பாபர் மசூதி குவிமாடத்தை இடித்தவருக்கு பாஜகவில் எம்.பி. பதவி



அயோத்தியில் 1992 டிசம்பர் 6ல் வி.எச்.பி. நடத்திய கர சேவையில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது இக்காட்சி அப்போது தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இதில், பாபர் மசூதி குவிமாடத்தை இடித்த கரசேவர்களில் ஒருவர் டாக்டர் அஜித் கோப்சடே என்று தெரியவந்தது.

இந்நிலையில் மாநிலங்களவைத் தேர்தலில் மகாராஷ்டிராவில் இருந்து பாஜக சார்பில் போட்டியிடும் மூன்று பேர் பட்டியலைக் அக்கட்சி வெளியிட்டது. இதில் அஜித் கோப்சடே பெயரும் இடம் பெற்றுள்ளது.

பாஜக மூத்த தலைவர் எல்.கே.அத்வானி தொடங்கிய ரத யாத்திரையில் கலந்து கொண்ட அஜித், பாபர் மசூதியின் குவிமாடத்தை இடித்த இளைஞர்களில் ஒருவராக இடம் பெற்றார்.

## கஞ்சா தலைநகர் எது? - அண்ணாமலையின் பொய்



தமிழ்நாடு கஞ்சா தலைநகரமாகிவிட்டது என்கிறார் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை. திமுக ஆட்சிக்கு வந்த பின் செய்த சாதனை இதுதான் என்கிறார் அவர்.

அண்ணாமலை சொல்வது உண்மையா? ஒன்றிய அரசின் அங்கமான ‘இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு’ என்ன சொல்கிறது?

2021 ஜூன் முதல் 2022 மே வரை பறிமுதல் செய்யப்பட்ட மொத்த கஞ்சா அளவுகளின் அடிப்படையில் மாநிலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதில், முதல் இரண்டு இடங்களில் ஆந்திரப் பிரதேசம் (1,78,804 கிலோ), ஒடிசா (1,75,242 கிலோ) மாநிலங்கள் உள்ளன. அண்ணாமலை அதிகம் விரும்பும் உத்தரப்பிரதேசம் 41,389 கிலோ பறிமுதல் செய்யப்பட்டு ஆறாவது இடத்தில் உள்ளது. 14 வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

இதேபோல், 2022 ஜூன் முதல் 2023 மே மாதம் வரையிலான காலத்தில், ஒடிசா, ஆந்திரப்பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்கள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. தமிழ்நாடு 18 வது இடத்தில் உள்ளது.

மாநிலங்களில் போதைப்பொருள் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையிலும் ‘இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு’ பட்டியலிட்டுள்ளது. அதன்படி, 2021 ஜூன் முதல் 2022 மே வரையிலான காலத்தில் கேரளா (14,134) முதலிடத்திலும், பஞ்சாப் (10,178), உத்தரப்பிரதேசம் (8,370) அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. 5,552 வழக்குகள் பதிவு செய்துள்ள தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது.

இதேபோன்று, 2022 ஜூன் முதல் 2023 மே மாதம் வரையிலான காலத்தில் 532 வழக்குள் பதிவு செய்யப்பட்டு 21வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

இவை எல்லாம் ‘இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு’ கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள். இதன்படி கஞ்சாவின் தலைநகரமாக தமிழ்நாடு எங்கே இருக்கிறது? பொய்யைத் தவிர எதையும் பேச மாட்டீர்களா அண்ணாமலை அவர்களே.

## ‘மனதின் குரல்’ அல்ல பாசிசக் குரல்

2014ல் பதவியேற்றது முதல் 10 ஆண்டுகளாக திருவாளர் மோடி வானொலியில் ஆற்றிவரும் உரைதான் மன்கி பாத். இதனை மனதின் குரல் என்று தமிழில் சொல்லலாம். அவர் பேசுவார் எல்லோரும் கேட்க வேண்டும். ஒன்றிய அமைச்சர்கள், ஆளுநர்கள், மாநில முதலமைச்சர்கள் முதல் பள்ளிக் குழந்தைகள் வரை அனைவரும் அமர்ந்து கேட்க வேண்டும். அவர் பேசுவார்.

மணிப்பூர் பற்றி எரிந்தது. உத்தரகாண்ட்டில் வன்முறை. டெல்லி எல்லையில் விவசாயிகளின் தொடர் போராட்டம். பாலியல் அத்துமீறல்களுக்கு எதிரான மல்யுத்த வீராங்கனைகளின் போராட்டம். அதிகரிக்கும் வேலையின்மை. இப்படி எத்தனை எத்தனை மக்கள் பிரச்சனைகள். அவர்களின் குரல், மோடியின் மனதின் குரலில் எதிரொலித்ததா? இல்லை. நாட்டின் முக்கியமான பிரச்சனைகள் எதைப் பற்றியும் அவர் பேசியதில்லை.

“நான் நினைப்பதைப் பேசுவேன். அதை மட்டும் கேளுங்கள்” அதாவது அவர் பேசுவார். மக்கள் கேட்க வேண்டும். இதுதான் பாசிச பாணி. மக்களின் குரலை எதிரொலிக்கும் பத்திரிகையாளர்களை, 10 ஆண்டுகளில் ஒருமுறை கூட சந்திக்காத மோடியின் மனதின் குரல் என்பது பாசிசக் குரலே. நாடாளுமன்றத் தேர்தலுக்காக தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நிரந்தரமாக நிறுத்துமா?




## சென்னையில் சாதி ஆணவப் படுகொலை



சென்னை பள்ளிக்கரணையைச் சேர்ந்த தலித் இளைஞர் பிரவீன் (வயது 22), பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஷர்மிளா (வயது 20) ஆகிய இருவரும் கடந்த நான்கு ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இவர்கள் கடந்த 19.10.2023 அன்று பெரியார் சுயமரியாதை திருமண நிலையத்தில் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். வெளியூரில் தங்கியிருந்த அவர்கள், ஒரு மாதத்திற்கு முன்பு ஷர்மிளாவின் கல்லூரி படிப்புக்காக பள்ளிக்கரணைக்கு வந்தனர். பிரவீனை கொலை செய்து விடுவோம் என மிரட்டி வந்த நிலையில், பிப்ரவரி 24 ஆம் தேதி அன்று இரவு ஷர்மிளாவின் அண்ணன் தினேஷ் உள்பட சிலர் பிரவீனை கொடூரமாக கொலை செய்தனர்.

திருமணமான நான்கு மாதங்களில் நிகழ்ந்துள்ள இந்தக் கொடூரம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புறங்களில் தான் சாதி ஆணவக் கொலை நடக்கிறது என்கிற சூழலில், சென்னை பள்ளிக்கரணையில் இத்தகைய சாதி ஆணவக் கொலை நடந்திருப்பது ஆபத்தானது. ஜனநாயகத்திற்குச் சவாலானது. சமூக சீர்திருத்த சிந்தனைகளுக்கு முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டுக்குத் தலைகுனிவு. சாதிய வன்மங்களுக்கு எதிரான கருத்துகள் பொதுச் சமூகத்தில் உருவாக வேண்டும். சாதிப் பெருமை, குடிப் பெருமை பேசுவோருக்கு எதிராகவும், திருமணம் என்பது வயது வந்த இளையோரின் தெரிவு உரிமை எனும் முற்போக்கு வாழ்வை முன்னெடுத்து பழைய மூடத்தனங்களை உடைத்தெறிய தமிழ்ச் சமூகம் தயங்கக் கூடாது. ஆணவப் படுகொலைகளை தடுக்க, தண்டனைகளை கடுமையாக்க தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

## இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்...

குஜராத் மாநிலத்தில் அரபிக் கடலோரம் இருக்கும் நகரம்தான் துவாரகா. பிப்ரவரி 25 அன்று பிரதமர் மோடி அங்கு சென்றார். ‘ஸ்கூபா டைவிங்’ வீரர்களுடன் அரபிக்கடலுக்குள் பயணித்தார். காவி உடை அணிந்திருந்தார். ஆழ்கடலில் தரைப்பகுதிக்குச் சென்று மயிலிறகை ஊன்றி வணங்கினார். வழிபட்டார். இந்தக் காணொளியை அவருடைய எக்ஸ் தளத்தில் (டுவிட்டர்) பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, “கடலில் மூழ்கிய நகரத்துக்குள் இறங்கியதும் தெய்வீகத்தின் பேராற்றல் என்னை ஆட்கொண்டது. பிரார்த்தனை செய்தேன். என்னுடன் எடுத்துச் சென்ற மயிலிறகுகளை வைத்து வணங்கினேன்” என்றார். துவாரகா நகரம் கிருஷ்ணருடன் தொடர்புடையது என்று கூறப்படுகிறது. இந்த நகரம் ஆழ்கடலுக்குள் மூழ்கிவிட்டதாம். மோடி கடலுக்குள் சென்ற இடத்தில்தான் அந்த துவாரகா நகரம் இருந்ததாம். அங்கு இறங்கியதும் பேராற்றல் பற்றிக்கொண்டதாம். இந்தியாவின் வளர்ச்சி கண்முன்னே வந்து சென்றதாம். கடலுக்கடியில் இருந்தபோது நாட்டை வளர்ந்த நாடாக்க வேண்டும் என்ற உறுதி வலுவடைந்ததாம்.

மோடி அவர்களே, இந்தியாவை இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி கொண்டு செல்லலாம் என கனவு காண்கிறீர்கள். புராணங்களை எல்லாம் எதார்த்தமாக, வரலாற்று உண்மையாக மாற்றி இந்து ராஷ்டிரத்தை அமைத்துவிடத் துடிக்கிறீர்கள். துவாரகா பற்றி எந்த தொல்லியல் சான்றும் இல்லாத போதும், புனைவையும் வரலாற்றுச் சான்றையும் குழப்பி சாதிக்க நினைக்கிறீர்கள். உங்கள் கனவு, ஆர்எஸ்எஸ் லட்சியம் ஒரு போதும் பலிக்காது.

பத்தனை போலவே
பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை
வலையினில் மாட்டி
எத்தனை காலம்தான்
இன்னும் எத்தனை காலம்தான்
ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே நம் நாட்டிலே



## இராமாயணத்தை மறுக்கும் தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள் 4

# அயோத்திக்கும் சரயு நதிக்கும் தொடர்பில்லை



சுந்தரசோழன்



**சரயு நதி இராமாயணத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கும் நதி ஆகும். இராமன் பிறந்ததாகக் கூறப்படும் அயோத்தியானது இந்நதிக் கரையில் தான் அமைந்துள்ளதாக இராமாயணம் கூறுகிறது. இன்றைய அயோத்தியைச் சுற்றி ஓடும் நதிக்குச் சர்யு என்னும் பெயரும் உண்டு.**

இராமனின் சகோதரனாகிய லட்சுமணன் இந்நதியில் மூழ்கி உயிரிழந்தார் என்றும் பின்னர் இராமனும் இந்நதியில் குதித்து இறந்தார் என்றும் பழங்கதைகள் கூறுகின்றன. இவ்வாறு இராமாயணக் கதை மாந்தர்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்த சரயு நதி, உத்திரப்பிரதேசத்தில் அயோத்தி என்றழைக்கப்படும் நகரைச் சுற்றி ஓடும் அதே நதிதானா என்பது நிரூபிக்கப்பட வேண்டும். ஆனால் ஆய்வாளர்கள் இதனை மறுத்துள்ளனர் என்பது ஆர்வமூட்டும் விசயமாகும்.

ரிக்வேத காலம் குறித்து விரிவாக ஆய்வு செய்த இயற்பியல் விஞ்ஞானியும், ஆய்வாளருமாகிய ராஜேஷ் கொச்சார் யமுனை நதிக்கு மேற்குப் பகுதியில் தான் இந்நதியை அடையாளம் காண முயற்சிக்க வேண்டும் என்றார். யமுனைக்கும் சிந்து நதிக்கும் இடைப்பட்ட பகுதியில் பாயும் நதிகள் அனைத்தும் அடையாளம் காணப்பட்டு விட்டது என்பதால் அதற்கும் மேற்கில் பாயும் ஏதோ ஒரு நதி தான் இந்த சரயுவாக இருக்க முடியும் என்கிறார். அவர் கூறுவது முற்றிலும் ஏற்கத்தக்கதே ஆகும்.

The Vedic People Their History and Geography என்ற தனது ஆய்வு நூலில் இது பற்றி விரிவாக விளக்கியுள்ள அவர், இராமாயணத்தில் குறிப்பிடப்படும் சரயு என்னும் நதி, ஜெண்ட் அவெஸ்தாவில் ஹரோயு என்று குறிப்பிடப்படும் நதியே என்கிறார். இன்றைய ஆப்கானிஸ்தானத்தில் பாயும் அந்நதி ஹரிருத் என்று அறியப்படுகிறது!! ஆகவே, இராமாயணக் கதைக்கும் அதில் இடம் பெற்றுள்ள சரயு நதி மற்றும் அதன் கரையில் அமைந்துள்ள அயோத்தி ஆகியவற்றுக்கும் இன்றைய அயோத்திக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்ற முடிவுக்கு இது இட்டுச் செல்கிறது.

இராமாயணம் பல்வேறு பழங்குடி மக்களைப் பற்றியும் இராமாயணக் கதை மாந்தர்களுக்கும் அவர்களுக்குமான தொடர்புகள் அல்லது உறவுகள் குறித்தும் பலசமயங்களில் குறிப்பிடுகிறது. இவற்றைச் சுட்டிக் காட்டும் ஆய்வாளர் ராஜேஷ் கொச்சார், அவை இன்றைய இந்தியாவை விட ஆப்கானிஸ்தானுக்குப் பொருந்திப் போவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

### இலங்காபுரி என்பது இன்றைய ஸ்ரீலங்கா அல்ல

இறுதியாக, இராமாயணத்தில் இலங்கை குறித்து இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் குறிப்புகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

இராவணன் ஒரு தீவை ஆட்சி செய்து வந்ததாகவும் அது லங்கா அல்லது லங்காபுரி என அழைக்கப்பட்டதாகவும் வால்மீகி இராமாயணம் கூறுகிறது. ஆனால் பண்டைய குறிப்புகளின் படி அது இன்றைய சிறீ லங்காவைக் குறிப்பிடுவது ஆகாது. இன்றைய சிறீ லங்காவைப் பண்டைய இலக்கியங்கள் தாம்ரபர்ணி அல்லது சிம்ஹள என்று தான் குறிப்பிட்டனவே தவிர, அதைக் குறிக்கும் விதமாக லங்கா என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பதை தொல்லியலாளர் எச்.டி. சங்காலியா சுட்டிக் காட்டுகிறார். அது மட்டுமின்றி, பிருஹத் சம்கிதை, பாகவத புராணம், மகாபாரதத்தின் வட இந்தியப் பதிப்பு மற்றும் வனபர்வம் ஆகியவற்றில் சிம்ஹள மற்றும் லங்கா ஆகிய இரண்டும் தனித்தனியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்து நமது கவனத்தை ஈர்க்கிறார். (The Ramayana in Historical Perspective, H.D. Sankalia, McMillan India Limited, 1982, Page 150)

லங்கா என்பது இன்றைய சிறீ லங்காவைக் குறிக்கும் விதமாக வால்மீகி இராமாயணத்தில் சில பிற்காலக் குறிப்புகள் இருப்பினும், அவை பிற்காலத்தில் உள்ளே நுழைக்கப்பட்டவை என்கிறார் சங்காலியா.

கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடுகளில் கொங்கணிக் கடற்கரைப் பகுதிகள் லங்கா அல்லது சிம்ஹள எனக் குறிப்பிடப் பட்டுள்ளதைக் குறிப்பிடும் அவர், குறிப்பிட்ட சித்தரிப்புக்குரிய தீவுகள் அல்லது தனிமைப் பகுதிகள் சிம்ஹள அல்லது லங்கா என்றழைக்கப்பட்டதாகக் கூறுகிறார். இன்றும் கூட மத்தியப் பிரதேசத்தில் லங்கா என அழைக்கப்படும் பல பகுதிகள் இருப்பது பற்றி அவர் கூறியிருப்பதும் உற்று நோக்கத் தக்கது. மிகச் சுருக்கமாகச் சொல்வதானால், இராமாயணக் கதை நடந்ததாகச் சொல்லப்படும் காலத்தில் (அதாவது அது ஒரு வேளை உண்மையாக நடந்தது என்பதை ஒரு வாதத்திற்காக ஒப்புக் கொண்டால்) மட்டுமின்றி, கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன்பு வரை சிலோன் தீவானது சிம்ஹள அல்லது லங்கா என்றழைக்கப் படவில்லை, இராமாயண லங்காபுரியை இன்றைய இலங்கையுடன் தொடர்பு படுத்துவதற்கு பண்டைய சான்றுகளில் இடமேயில்லை.

### இராமாயணம் வாய்மொழி கதையே

இந்துக்களின் புனித காவியங்களில் ஒன்றும் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் மிக முக்கியமான ஒரு அவதாரம் எனக் கூறப்படும் இராமனின் கதையைக் கூறும் இராமாயணம் குறித்த இத்தனைக் குழப்பங்களுக்குக் காரணம் தான் என்ன?

இராமாயணத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்த தொல்கதை ஆப்கானிஸ்தானத்து புவியியல் பரப்பை மையமாகக் கொண்டது என்பதை ராஜேஷ் கொச்சார் இராமாயணத்தின் உள்ளார்ந்த சான்றுகளின் உதவியுடன் சுட்டிக் காட்டுகிறார். பின்னர் இன்றைய கங்கை நதிப் பகுதியில் நடைபெற்றதாக மறுகட்டமைப்பு செய்யப்பட்டதே அதில் இடம் பெற்றுள்ள புவியியல் குறிப்புகள் தவறான தகவலைத் தருவதற்குக் காரணம் என்கிறார் அவர்.

இராமாயணத்தில் நதிகள் பற்றி இடம் பெற்றுள்ள குழப்பங்கள், அவரது கூற்று உண்மையெனத் தெளிவாகக் காட்டுகின்றன. அதைப் போலவே இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள சம்பூகன் வதம் போன்ற வர்ணாசிரமத்தை வலியுறுத்தும் வகையான கூறுகள், அது பிற்காலத்தில் பிராமணமயமாக்கப்பட்ட போது திணிக்கப்பட்டவையாக இருக்கும் என்று கூறலாம்.


இந்தச் சான்றுகள் அனைத்தும் சுட்டிக் காட்டுவது ஒன்றை மட்டுமே.

இறுதியாகச் சொல்வதானால், இராமாயணத்தில் உண்மை வரலாறு இல்லை.

உண்மை வரலாற்றில் இராமாயணத்திற்கு இடம் இல்லை.

இராமாயணத்தை உண்மையென நிரூபிக்கும் விதமான நம்பகமான, கேள்விக்கிடமற்ற தொல்லியல் சான்றுகள் எதுவும் கிடையாது. அது காலம் காலமாகப் பேசப்பட்டு வரும் மதவியல் புனைகதை மட்டுமே ஆகும். அதன் அடிப்படைக் கூறுகள் தொல்லியல் மற்றும் வரலாற்றுக் காரணிகளால் தெளிவாக மறுக்கப் பட்டுள்ளன.

**நிறைவு**




வால்மீகி இராமாயணத்தில் லங்கா எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பகுதியைப் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் ஆய்வு செய்த அவர், அது மத்தியப் பிரதேசத்தில் பஸ்தார் அல்லது அதை ஒட்டிய ஏதோ ஒரு மலைப் பகுதியில் அமைந்த இடமாக இருக்க வேண்டும் என்கிறார். இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள இடப்பெயர்களைப் புவியியல் பார்வையில் ஆய்வு செய்த பரமசிவ ஐயர் என்பவரும் கிட்டத்தட்ட இதே கருத்தைக் கூறியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் சிலோன் தீவானது லங்கா என அழைக்கப்படத் தொடங்கியது, நாகார்சுனகொண்டா கல்வெட்டுகள் மற்றும் அசோகனின் பாறைச் சாசனங்கள் ஆகியவற்றில் இன்றைய சிறீ லங்கா தாம்ரபர்ணி அல்லது சிம்ஹள என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் சங்காலியா. அது மட்டுமல்ல. சிலோனின் துவக்ககால மத இலக்கியங்களில் இராமர் மற்றும் இராவணன் பற்றிய எந்தக் குறிப்புகளும் கிடையாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை!



இராமாயணத்தின் கதைக்கருவானது அடிப்படையில் வாய்மொழிக் கதைப்பாடலாக இருந்த ஒன்று எனப் பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்கதையானது பல நூற்றாண்டுக் காலமாக மாற்றியும் திருத்தியும் தொகுத்தும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு அதன் தற்போதைய வடிவத்தைப் பெற்றுள்ளது. காலப்போக்கில் புதிய தேவைகளுக்கு ஏற்றவாறு புத்தாக்கங்களும் செய்யப்பட்டது. ஆகவே, அது ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது குறிப்பிட்ட புவியியல் பரப்பில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களின் அணிவகுப்பைக் குறிப்பது அல்ல. அவ்வாறு மறுவார்ப்புச் செய்யப்பட்ட கதையும் அதன் உண்மையான புவியியல் பரப்புக்குத் தொடர்பற்ற வகையில். புதிய தேவைகளுக்காகவும் புதிய நிலப்பரப்புகளில் அதன் கதைப்பரவலுக்காகவும் அது மறுகட்டமைப்புச் செய்யப்பட்டது.

# உணவுக்கு செலவிடும் தொகை



டி.எம்.மூர்த்தி

**வீட்டு நுகர்வு செலவு கணக்கெடுப்பு ஆய்வு குறித்து முடிவுகளை ஒன்றிய அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:**

◆ 201718 இல் தேசிய புள்ளியல் அலுவலகம் நுகர்வோர் செலவின கணக்கீட்டை ஒன்றிய அரசுக்கு தந்தது.

◆ 1970களில் இருந்து 201718ல் முதல் முறையாக தனிநபர் நுகர்வு செலவு குறைந்துள்ளது என்று கணக்கெடுப்பு காட்டியது. அதனைப் பொறுக்காத மோடி அரசு, அதை "தரவுத்தரமற்றது" என்று குற்றம் சாட்டியது. அந்த முடிவுகளை வெளியிட வேண்டாம் என்று 2019 நவம்பரில் முடிவு செய்தது.

◆ தரவுத் தரத்தில் அனைத்து "செம்மைப்படுத்தல்களையும்' இணைத்து, 2020'21 மற்றும் 2021'22 ஆம் ஆண்டுகளில் அடுத்த நுகர்வோர் செலவினக் கணக்கெடுப்பை நடத்தப் போவதாக அறிவித்தது.

◆தனது ஆட்சிக்கு சிரமம் ஏற்படுத்தாத வகையில் திருத்தங்களை எல்லாம் செய்து "செம்மைப்படுத்தி" இப்போது முடிவுகள் வெளியிடப்பட்டு விட்டன.

◆ உணவை விட மற்ற வகைகளுக்கு இந்தியர்கள் அதிக செலவு செய்வதாகவும், இது வளர்ச்சியை கட்டுவதாகவும் பல ஊடகங்கள் மோடி அரசுக்கு ஜால்ரா போட்டு வருகின்றன.

◆உண்மை நிலவரம் எளிதாக வெளியில் தெரிந்து விடாமல் மறைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையிலும் கூட, பெரும்பான்மையான இந்திய மக்கள் தங்களது உணவுக்கு கூட போதிய செலவு செய்ய முடியாத நிலையில் வாழ்கிறார்கள் என்ற உண்மை வெளிப்பட்டு உள்ளது.

◆ வீட்டில் சமைக்காமல் வெளியில் இருந்து தருவிக்கப்படும் உணவுக்கான செலவு கூடுதலாகி இருக்கிறதாம். இது வளர்ச்சியா? குடும்பங்கள் சிதைந்து, உதவிக்கு ஆளின்றி, ஆணும் பெண்ணும் வேலை செய்தால் தான் குடும்பச் செலவை சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்ட பின்பு, சமைப்பதற்குரிய நேரம் வீட்டில் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மையாகும்.

◆நகரப்பகுதிகளில் வாடகை பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. பெட்ரோல் டீசல் விலை உயர்வு காரணமாக போக்குவரத்துக்கு இந்தியர்கள் முன்பை விட அதிகம் செலவழிக்கிறார்கள் என்பதை கணக்கீடு காட்டுகிறது

◆ மொபைல் போன்கள், ஃப்ரிட்ஜ், தொலைக்காட்சி பெட்டிகள், இருசக்கர வாகனங்கள், இன்டர்நெட்டுக்கான செலவு ஆகியவை தவிர்க்க முடியாத செலவுகள் ஆகிவிட்டன. முன்பை விட இந்தச் செலவுகள் அதிகமானது உண்மை.

◆ எதை வேண்டுமானாலும் ஒரு ரூபாய் கொடுத்து தவணையில் எடுத்துச் சொல்லுங்கள் என்று கார்ப்பரேட்டுகள் நடத்திய வர்த்தக சூதாட்ட, கண் கவரும் விளம்பர வலையில் இந்தியர்கள் சிக்கிக் கொண்டார்கள் என்பதும் மெய்தான்.

◆ அதிக வேலை, போதிய ஓய்வின்மை, தூக்கக் குறைபாடு இவை எல்லாம் இந்தியர்களை மருத்துவமனையை நோக்கி தள்ளுகின்றன. அரசின் கையில் இருந்த பொது மருத்துவம், தனியாரிடம் தள்ளப்பட்டு வணிகமயமாகிவிட்டதால், உள்நோயாளியாகவும் வெளி நோயாளியாகவும் இந்தியர்கள் செய்யும் செலவு அதிகரித்திருப்பதை இந்த கணக்கீடு வெளிப்படுத்துகிறது. அதேபோல கல்விக்கான செலவும் உயர்ந்திருக்கிறது.

◆ செலவுகள் அதிகமாகும் போது, வரவு அதிகரிக்கவில்லை என்பதை பல ஆய்வுகள், அறிவியல் பூர்வமாக தெளிவாக நிரூபித்துள்ளன.

◆ எனவே இந்திய மக்களால் குறைக்க



| செலவுகள் | நகர்ப்புறம் | | | | | கிராமப்புறம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வகை | 1999–00 | 2004–05 | 2009–10 | 2011–12 | 2022–23 | 1999–00 | 2004–05 | 2009–10 | 2011–12 | 2022–23 |
| தானிய வகைகள் | 12.4 | 9.6 | 8.2 | 6.7 | 4.5 | 22.2 | 17.5 | 13.8 | 10.8 | 6.9 |
| பருப்பு வகைகள் | 3.0 | 2.1 | 2.5 | 2.0 | 1.4 | 3.9 | 3.1 | 3.3 | 2.9 | 2.0 |
| சர்க்கரை & உப்பு | 1.8 | 1.6 | 1.5 | 1.2 | 0.6 | 2.6 | 2.5 | 2.3 | 1.8 | 0.9 |
| பால் & பால் பொருட்கள் | 8.7 | 7.5 | 6.9 | 7.0 | 7.2 | 8.8 | 8.2 | 7.6 | 8.0 | 8.1 |
| காய்கறிகள் | 5.1 | 4.2 | 5.7 | 4.6 | 3.8 | 6.2 | 5.9 | 8.3 | 6.6 | 5.3 |
| பழங்கள் (புதிய & உலர் வகைகள்) | 2.4 | 2.1 | 3.2 | 3.4 | 3.8 | 1.7 | 1.8 | 2.4 | 2.8 | 3.6 |
| முட்டை, மீன் & இறைச்சி | 3.1 | 2.6 | 3.6 | 3.7 | 3.5 | 3.3 | 3.2 | 4.7 | 4.8 | 4.8 |
| எண்ணெய் & மசாலா | 5.2 | 4.8 | 4.9 | 5.1 | 4.5 | 6.5 | 6.7 | 7.1 | 7.2 | 6.4 |
| குடிபானம், பதப்படுத்தப்பட்ட பொருட்கள் | 6.4 | 5.9 | 8.0 | 9.0 | 10.5 | 4.2 | 4.4 | 7.4 | 7.9 | 9.4 |
| வெற்றிலை, புகையிலை & போதைப் பொருட்கள் | 1.9 | 1.5 | 1.5 | 1.6 | 2.4 | 2.9 | 2.6 | 3.0 | 3.2 | 3.7 |
| எரிபொருள் | 7.8 | 9.5 | 6.9 | 6.7 | 6.2 | 7.5 | 9.8 | 8.0 | 8.0 | 6.5 |
| வீட்டு உபயோகப் பொருட்கள் | 5.5 | 4.7 | 3.9 | 3.9 | 4.9 | 4.7 | 4.8 | 4.0 | 4.0 | 5.0 |
| கல்வி | 4.3 | 6.7 | 8.1 | 6.9 | 5.7 | 1.9 | 3.1 | 3.6 | 3.5 | 3.2 |
| மருத்துவம் (உள் & வெளி) | 5.1 | 5.2 | 5.0 | 5.5 | 5.9 | 6.1 | 6.3 | 5.4 | 6.7 | 7.0 |
| பயண செலவு | 5.5 | 6.2 | 5.6 | 6.5 | 8.5 | 2.9 | 3.6 | 3.5 | 4.2 | 7.4 |
| பயணம் நீங்கலான இதர சேவைகள் | 4.7 | 6.7 | 6.3 | 5.6 | 5.9 | 3.0 | 3.7 | 4.2 | 4.0 | 5.0 |
| வாடகை | 4.5 | 5.4 | 5.8 | 6.2 | 6.5 | 0.4 | 0.5 | 0.5 | 0.5 | 0.8 |
| பொழுதுபோக்கு | 1.2 | 1.8 | 1.6 | 1.6 | 1.6 | 0.4 | 0.6 | 0.8 | 1.0 | 1.1 |
| செஸ் & மற்ற வரிகள் | 0.7 | 0.8 | 0.8 | 0.8 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.3 | 0.1 |
| ஆடை, படுக்கை & காலணிகள் | 7.2 | 6.6 | 5.8 | 6.4 | 5.4 | 8.0 | 7.8 | 6.2 | 7.0 | 6.0 |
| நிலைத்து நிற்கும் பொருட்கள் | 3.6 | 4.5 | 4.3 | 5.6 | 7.1 | 2.6 | 4.0 | 3.7 | 4.9 | 6.8 |

## பாசிச ஆட்டம்




மும்பையில் மக்கள் தொகை அறிவியல் கல்லூரி (இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆஃப் பாப்புலேஷன் சயின்ஸஸ்) உள்ளது. இதில் ராமர் கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு வலதுசாரி மாணவர்கள் ஏக களேபரமாய் விழா நடத்தினார்கள். இதற்கு அனுமதி மறுக்குமாறு கல்லூரி நிர்வாகத்திடம் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினரை சேர்ந்த மாணவர்கள் கூறி கடிதம் தந்தனர். கையெழுத்திட்ட மாணவர்கள் அனைவரும் இந்துக்கள் தான்.

இதில் எந்த தலையிடும் செய்ய நிர்வாகம் மறுத்து விட்டதால், நிர்வாகத்துக்கு அனுப்பிய மனுவின் நகல் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டது. இந்த தகவல் கல்வி கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் வலதுசாரிகளுக்கு போய்ச் சேர்ந்தது.

கல்வி நிலையத்துக்கு உள்ளே நுழைந்து, இதனை வலைத்தளத்தில் பகிர்ந்த 25 வயது மாணவரை கோவாண்டி காவல் நிலையத்தினர் கைது செய்தார்கள். இதற்கு அனுமதி தந்த கல்விக் கழகத்தின் பதிவாளர் பிரசாந்த் போர்டே, தான் உடல் நலம் இன்றி மருத்துவமனையில் இருப்பதாகவும் பேசக்கூடிய சூழலில் இல்லை என்றும் தி வயர் ஊடகத்துக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை பதிவிட்ட மாணவர் சொந்த மாநிலமான கேரளாவுக்கு சென்று இருந்தார். அவர் கல்விக் கழகத்திற்கு திரும்பி வந்தவுடன் கைது செய்யப்பட்டு பிப்ரவரி 22 ஆம் தேதி உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

ராமர் கோயில் திறப்பு விழா தொடர்பான நம்பிக்கை உணர்வுகளை புண்படுத்தி விட்டதாக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## "கொடுமையைச் சகிப்பதும் பாவம் செய்வதுதான்"



அரியானா எல்லையில் குவிந்துள்ள விவசாயிகளுக்காக, ஒரு மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

சுடப்பட்ட ரப்பர் புல்லட்டுகளும், துப்பாக்கிகளாலும், பறக்கும் ட்ரோன்களிலிருந்தும் வெடிக்கப் பட்ட கண்ணீர் புகை குண்டுகளின் உறைகளும் அங்கு கிடைக்கின்றன. ராணுவ ஆயுதங்கள் இங்கு விவசாயிகள் மீது பயன்படுத்தப்படுகின்றன.

வயது முதிர்ந்த விவசாயிகள் கண்ணீர் குண்டுப் புகையை முகர்ந்ததால், அவர்களது நுரையீரல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களது உடல்களில் இருந்து குண்டுத் துகள்களையும் அகற்றியுள்ளனர். ராஜ்புரா மருத்துவமனை காயம் பட்டவர்களால் நிரம்பி வழிகிறது. இங்கு என்ன நிகழ்ந்ததோ அவை அனைத்தும் மிகவும் தவறானவை.

டாக்டர் ஹர்பீத் சிங், டாக்டர் ரவீந்தர் சிங் என்ற இரு இளம் டாக்டர்கள் அங்கு பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். காவல்துறை அல்லது துணை ராணுவ படையால் தாக்குதலுக்கு ஆளோவோம் என்று நீங்கள் அஞ்சவில்லையா என்று ரோஹித் குமார் கேட்டார்.

டாக்டர் ஹர்பீத் சிரித்துக் கொண்டே தலையை குலுக்கினார். "நாங்கள் இங்கு வரும்போதே நாங்கள் காயப்படலாம் அல்லது கொல்லவும் படலாம் என்பதை முழுக்க அறிந்தே வந்திருக்கிறோம். நாங்கள் அஞ்சவில்லை. நாங்கள் எங்களுடைய உரிமைகளுக்கு போராடுவதற்காகவே இங்கு நிற்கிறோம். எங்களின் குரு கோவிந்த் சிங், 'ஒரு தவறைச் செய்வது எவ்வளவு பெரிய பாவமோ, அதைப்போலவே ஒரு கொடுமையை சகித்துக் கொண்டிருப்பதும் பாவம்தான் என்று போதித்திருக்கிறார்" என்றார்.

# குறைந்து விட்டது

## புள்ளியியல் ஆய்வு முடிவுகள்






முடிந்த ஒரே செலவு அவர்களது உணவாகத்தான் இருக்கிறது. பட்டினி அல்லது அரைகுறை பட்டினி என்ற நிலை வந்துவிட்டது. ஊட்டச்சத்து குறைந்ததாகவும் உணவு மாறிவிட்டது. உலகத்தில் மிகக் கடும் பட்டினியில் உள்ள 15 நாடுகளில் ஒன்று இந்தியா என்பதை ஏற்கனவே ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. இந்தக் கணக்கீடும் அதற்கு இசைவானதாகவே இருக்கிறது.

◆ உடைகள், செருப்புகள், துணி வகைகள் ஆகியவற்றை வாங்குவதற்காக இந்தியர்கள் செலவிட்ட தொகையும் குறைத்து விட்டது.

◆ இந்தியர்களில் அடி நிலையில் உள்ள மக்கள் ஒரு தனி நபருக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக 1500 ரூபாய்க்கும் குறைவாகத்தான் செலவு செய்ய முடிகிறது. அதே நேரத்தில் மேல் தட்டு மக்கள் தனி நபருக்கு 10,591 செலவு செய்கிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

◆ உயர் நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைச் செலவுகளை அவர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் பார்த்துக் கொள்கின்றன. ஆனால் ஏழைகளுக்கு அனைத்து செலவுகளும் அவர்கள் தலையின் மீதுதான்.

◆ நகரப் பகுதிகளில் இந்தியாவின் சராசரி தனிநபர் நுகர்வுச் செலவு 6459 ஆக இருக்கும் போது, தமிழ்நாடு அதைவிட 1171 புள்ளிகள் அதிகமாகி 7630 என்ற நிலையில் உள்ளது. அதிக நகரமயமான மாநிலங்களில் தமிழ்நாடு முதல் வரிசையில் இருக்கிறது. எனவே இங்கு ஏழைகளும் அதிக செலவு செய்தாக வேண்டும்.

◆ அமெரிக்க அதிபர் வருகையின் போது குஜராத்தில் துணி கட்டி மறைத்தது போல, உண்மை நிலை வெளியில் தெரிந்து விடாமல் கணக்கீட்டு ஆய்வில் மாய்மாலங்களை புள்ளியியல் துறை அமைச்சகம் செய்த போதிலும், உண்மையில் மோடி ஆட்சியில் இந்தியர்கள் துன்புறுகிறார்கள் என்பதை பட்டவர்த்தனமாக இந்த அறிக்கை வெளிக்காட்டி இருக்கிறது.

**முழு ஆய்வறிக்கையைப் படிக்க** www.mospi.gov.in

## "எங்கள் இதயங்கள் அழுகின்றன"



பஞ்சாப் மாநிலத்தில் இருந்து ஹரியானாவுக்குள் நுழையும் எல்லையான ஷம்முவில் விவசாயிகள் தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் டெல்லியை நோக்கி வர முடியாதது மட்டுமல்ல, இங்கிருந்து யாரும் விவசாயிகளை பார்க்க சென்று விட முடியாது.

பல கிலோமீட்டர்கள் சுற்றிச் சென்று அவர்களைச் சந்தித்த ரோஹித் குமார் என்ற பத்திரிகையாளர் எழுதுகிறார்:

என்னை பார்த்தவுடன் அந்த விவசாயிகள் "சாப்பிட்டீர்களா" என்று கேட்டார்கள். ஒரு பயங்கரவாதியால் அந்தக் கேள்வியை கேட்க முடியாது.

"நீங்கள் என்னதான் கோருகிறீர்கள் என்பதை மற்றவர்களுக்குப் புரியும் வகையில் சொல்லுங்கள்" என்று கேட்டேன்.

அம்ரித் சிங் என்ற விவசாயி சொன்னார்: "நாங்கள் உருளைக்கிழங்கு, தக்காளி, வெங்காயம், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கேட்பது எங்களுக்காக மட்டுமல்ல. இவற்றை எங்களிடமிருந்து ஒரு கிலோ, இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்கு வாங்குகிறார்கள் ஆனால் அதை உங்களுக்கு ஒரு கிலோ 80 ரூபாய் 100 ரூபாய் ஏன் 150 ரூபாய் என்று விற்கிறார்கள்.


எங்களிடம் ஒன்றிய அரசு முன்பு என்ன வாக்குறுதி அளித்ததோ, அதைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று கோருகிறோம். இதற்காக ஊடகங்கள் எங்களை 'காலிஸ்தானிகள்' என்கின்றன. உங்கள் கேமராவை எடுத்துக்கொண்டு நாலா பக்கமும் சுற்றிப் பாருங்கள். நாங்கள் பயங்கரவாதிகள் போன்றா தெரிகிறோம்?

ஒரு குடும்பத்துக்குள் பிரச்சனை என்றால், மூத்தவர்களிடம் தானே முறையிட முடியும். எமது நாட்டை ஆளுகிற உயர் பதவியில் உள்ளவர்களிடம் எங்கள் குறைகளைக் கூறுகிறோம். அதற்காக எங்களுக்கு என்ன பதில் கிடைக்கிறது.

தடி கொண்டு தாக்குகிறார்கள், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசுகிறார்கள், சுடுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலே எங்களை 'எதிரிகள்' என்கிறார்கள்.

எங்கள் சொந்த நாட்டிலேயே நாங்கள் அந்நியர்களைப் போல உணர வைக்க படுகிறோம். உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் எங்கள் இதயங்கள் அழுது கொண்டிருக்கின்றன"

## இதுவா "ராம ராஜ்ஜியம்'



காஷ்மீர், ஸ்ரீ நகரில் உள்ள ஜாமியா மஸ்ஜித் மிகப் பெரிய வரலாற்று சிறப்புள்ள மசூதி.

உலகெங்கிலும், ரம்ஜான் மாதத்தின் தொடக்கத்திற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு ஷப்இபாரத் பிரார்த்தனைகள் நடத்தப்படுகின்றன

இந்த நாளில், காஷ்மீர் மாநிலம் முழுவதிலும் இருந்து முஸ்லிம்கள் இந்த மசூதியில் தொழுகைக்காக திரள்வது வழக்கம்.

பிப்ரவரி 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, தொழுகை தொடங்குவதற்கு முன்பு, மசூதிக்கு வந்த அதிகாரிகள் குழு, அதனை பலவந்தமாக இழுத்து மூடிவிட்டது.

அது மட்டுமல்லாமல், அந்த பிரார்த்தனையின் போது பேசவிருந்த மிதவாத ஹுரியத் தலைவர் மிர்வைஸ் உமர் ஃபாரூக் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஆனால், இதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவு எதுவும் வெளியிடப்படவில்லை. காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மசூதியில் வருடாந்திர கூட்டத் தொழுகைகளில் பங்கேற்க திரண்டனர். ஆனால் மசூதி இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது.


காஷ்மீருக்கு தனித் தகுதி அளிக்கும் அரசியல் சாசனத்தில் 370 வது பிரிவு நீக்கப்பட்ட பிறகு, இதுபோன்ற விழா நேரங்களில் அதிகாரிகள் மசூதிகளை அடிக்கடி மூடிவிடுகிறார்கள். மேலும் வழிபட வருபவர்களை திருப்பிவிட, மசூதியில் பிரதான வாயில்களில் துப்பாக்கி ஏந்திய ராணுவத்தினர் நிறுத்தப்படுகின்றனர்.

ஒரு பக்கம் ராமர் கோவில் திறப்பு விழாவை நாடு முழுமையும் மூர்க்கத்தனமாக கொண்டாடுகிறார்கள். அது குறித்து முணுமுணுத்தால் கூட கைது செய்கிறார்கள்.

மறுபுறம் மற்ற மதத்தினர் தமது வழக்கமான விழாக்களை கொண்டாட விடாமல் காவல்துறை ராணுவத்தை பயன்படுத்தி தடுக்கிறார்கள். தொழுகை நடத்துவோம் என்று சொன்னால் கைது செய்கிறார்கள்.

இந்த அக்கிரமங்களுக்கு ஆர்.எஸ்.எஸ். – பி.ஜே.பி. சூட்டியுள்ள பெயர் ராமராஜ்யம்.

## உயிர்கள் இங்கே ...யிருக்கு சமம்



மணிப்பூர் மாநில காவல் துறையைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட குக்கி இன அதிகாரிகளை, மெய்தி இனத்தினர் வசிக்கும் பகுதிகளுக்கு பணிமாற்றம் செய்து பாஜக அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. தங்களாலானவரை இதை ரத்து செய்ய முயற்சித்து விட்டதாகவும் ஆனால் அரசு அதில் உறுதியாக இருப்பதாகவும் அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர். இதனால் பழங்குடி மக்கள் அமைப்பை அணுகி இதில் தலையிடுமாறு அதிகாரிகள் கோரியுள்ளார்கள்.

உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு அந்த அமைப்பு எழுதியுள்ள கடிதத்தில், மெய்தி இன மக்கள் உள்ள மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை ஏற்று, அதிகாரிகள் மெய்தி மாவட்டங்களுக்கு உயிரோடு பயணம் செய்வதே கடினம். ஒரு வேளை சமாளித்து அங்கு சென்றால் அங்குள்ள மெய்தி இன காவலர்களோடு சேர்ந்து பணியாற்ற நேரிடும். சரியாக சொன்னால் இது அவர்களுக்கு வழங்கப்படும் மரண தண்டனையாகும்" என்று கூறியுள்ளது.

உயிருக்கு அஞ்சி குக்கி இன அதிகாரிகள் புதிய பணியிடத்திற்கு செல்லவில்லை என்றால், உத்தரவுக்கு அடிபணிய மறுத்ததாக குற்றம் சாட்டி, வேலை நீக்கம் செய்யும் நோக்கத்தோடு தான் பாஜக அரசு இந்த பணி மாற்றத்தைச் செய்துள்ளது.

இதற்கு பதில் அளித்த மணிப்பூர் அரசாங்கம் "இந்தப் பணி மாற்றலுக்கு தீய நோக்கம் ஏதுமில்லை. அந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, கூடுதல் சம்பளமும் தருகிற நல்ல நோக்கத்தை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கருதினால் உரிய பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படும்" என்றும் அரசு கூறியுள்ளது விந்தையிலும் விந்தை.

காவல்துறை அதிகாரிகளுக்கே அதிகாரிகள் பாதுகாப்பா!

மெய்தி இனத்தைச் சேர்ந்த சக காவலர்களாலேயே கூட உயிர் ஆபத்து ஏற்படும் என்று அதிகாரிகள் அஞ்சும் போது, அவர்களுக்கு யாரைக் கொண்டு பாதுகாப்பு கொடுப்பார்கள்?!




# அனைத்துப் பகுதி மக்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கை

## சட்டப்பேரவையில் டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ உரை





**தமிழக அரசின் 2024 – 25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவர் டி.ராமச்சந்திரன் பங்கேற்று உரையாற்றினார். அதில் இருந்து..**

“இயற்கைப் பேரிடரில் பாதிக்கப்பட்ட போது தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு பாராபட்சம் காட்டி வந்தது. இந்த நிலையில், இதுபோன்ற சவால்களுக்கு இடையே தாக்கல் செய்யப்பட்டுள்ள, அனைத்துப் பகுதி மக்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இருபெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் மொழி பெயர்க்கப்படும், கீழடி உள்ளிட்ட எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். கீழடியில் திறந்தவெளி அரங்கம் அமைக்கப்படும். பழங்குடி மக்களுடைய மொழி ஒலிகள் ஆவணப்படுத்தப்படும் உள்ளிட்ட தமிழ் தொன்மை மரபுகளை பாதுகாத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

மகளிர் உரிமைத் தொகை சாத்தியமா? என்றார்கள். தற்போது ஒரு கோடியே 17 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய், அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தி, சாத்தியம் என்று இந்த அரசு சாதனை படைத்திருக்கிறது. இருப்பினும் உரிமைத் தொகை கிடைக்காத, தகுதி படைத்த பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்களின் கல்விச் செலவு, விடுதிச் செலவு, உயர் கல்விச் செலவு உள்ளிட்டவற்றை அரசே ஏற்கும் என்று கூறி அவர்களை சமுதாயத்தில் சமநிலைக்கு இந்த அரசு உயர்த்தி இருப்பதை பெருமையோடு பார்க்கிறோம்.

போக்குவரத்து தொழிலாளர்கள் பஞ்சப்படி உள்ளிட்ட பணக்கொடைகள் கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு செவிமடுத்து நிறைவேற்ற வேண்டும்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தொலைநோக்குத் திட்டமான குடிசை இல்லா தமிழ்நாடு என்ற நோக்கத்தை அடையும் வகையில், 2030 ஆம் ஆண்டிற்குள் 80 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த இலக்கு எட்டப்படுமேயானல் இந்தியாவிலேயே தமிழ்நாடு குடிசையில்லா மாநிலம் என்ற பெருமையை அடையும். தற்போது ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதால் ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பதை 5 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

கோவில் நிலங்கள், மடங்கள், அறக்கட்டளைகள், தனியார் நிலங்கள், மேய்க்கால் புறம்போக்குகள், நீர்நிலைகள் போன்ற அரசின் பல்வேறு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். ஒரு சிறப்பு திட்டத்தை அறிவித்து அந்த நிலத்தை வகை மாற்றம் செய்து பல ஆண்டுகளாக குடியிருப்பவருக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

கல்விக்கு செலவிடும் தொகையை செலவினமாக கருதாமல் எதிர்கால மனித வள ஆற்றலுக்கான மூலதனமாக கருதி பள்ளிக்கல்வி, உயர்கல்வி போன்றவற்றிற்கு தற்போது நிதிநிலை அறிக்கையில் மிகப்பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பெரும் சாதனையாகும். அதே வேளையில் பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வித்துறை ஆகியவற்றில் பல ஆண்டுகாலமாக பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகியோருக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் பணிபுரிகின்ற தூய்மைப் பணியாளர்கள் ஓஎச்டி ஆப்ரேட்டர்கள் போன்றவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு ரூ.2500 முதல் ரூ.7000 வரை தான் ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்க இந்த அரசு முன் வரவேண்டும்.

எம்.ஆர்.பி. செவிலியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். ஆஷா பணியாளர்களுக்கு பாண்டிச்சேரி, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் ஒன்றிய அரசு ரூ.5,000 மாநில அரசு ரூ.5,000 வழங்குகிறது. நம்முடைய சுகாதார துறையும் அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் ஊதியமாக வழங்க வேண்டும். ஆஷா பணியாளர்களில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு கிராம செவிலியர் பணி வழங்க வேண்டும்.

அரசுக்கு அதிகமாக வருவாய் ஈட்டித் தரும் டாஸ்மாக் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். பகுதி நேர ஆசிரியர்கள் கடந்த 12 ஆண்டுகளாக ரூ.12,500 ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் உரிய இட ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என்றால் சாதிவாரி கணக்கெடுப்பு அவசியமாகும். தற்போது பீகார் சாதிவாரி கணக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது. ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் சாதி வாரி கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இதேபோன்று தமிழ்நாடு அரசும் சாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க வேண்டும்.

லம்பாடி இன மக்கள் அதாவது கச்சவாடி, பாலேஹக்கு, கே.ஹோசூர், குண்டாலம், உரிகம், கோட்டையூர் என 25000 பேர் இன்றைக்கு என்னுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். தர்மபுரி, சேலம், ஈரோடு மாவட்டங்களில் 3 லட்சம் பேர் இருக்கிறார்கள். அண்டை மாநிலமான கர்நாடகாவில் எஸ்.சி. பட்டியலிலும் ஆந்திராவில் எஸ்.டி பட்டியலிலும் இருக்கிறார்கள். கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் பின்தங்கி உள்ளனர். தமிழ்நாட்டில் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் அவர்களை எஸ்.டி. பட்டியலுக்கு மாற்றப் பரிந்துரைக்க வேண்டும்.

வால்மீகி இனத்தவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் அவர்கள் எஸ்.டி. பட்டியலில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் அவர்களையும் எஸ்.டி. பட்டியலில் சேர்ப்பதற்கு ஒன்றிய அரசிடம் பரிந்துரைக்க வேண்டும்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பொருளாதாரத்திலும், வேலை வாய்ப்பிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. கொரோனா பெருந்தொற்று கால முடக்கம் மற்றும் ஒன்றிய அரசின் ஜிஎஸ்டி வரி விதிப்பு ஆகியவற்றால் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கின்றன. தமிழக அரசின் மின் கட்டண உயர்வு, நிலை கட்டண உயர்வு, பீக் அவர் கட்டண உயர்வு, சூரிய ஒளி (சோலார்) மின்தகடுகளுக்கான கட்டண உயர்வு போன்றவற்றால் அவர்கள் மேலும் நெருக்கடிக்கு ஆளாகி இருக்கின்றனர். எனவே இந்த கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். மாணவர்களின் கல்வி கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும். எஸ்சி, எஸ்டி பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்திட சட்டம் இயற்ற வேண்டும்.

பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்க வலிமையான ஆணையத்தை அரசு அமைக்க வேண்டும். ஆணவக் கொலைகளை தடுத்திட தனிச்சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டும்” இவ்வாறு ராமச்சந்திரன் எம்எல்ஏ உரையாற்றினார். ■

### தளி தொகுதியில்...



என்னுடைய தளி தொகுதியில் உள்ள தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் பேரூராட்சிகளில் சாலைகள் குறுகலாக இருக்கின்றன. இந்தப் பகுதியில் ஏராளமான தொழிற்சாலைகள் இருப்பதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசலும் விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே, தேன்கனிக்கோட்டை பேரூராட்சியிலும், கெலமங்கலம் பேரூராட்சியிலும் புறவழிச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

தேன்கனிக்கோட்டையிலிருந்து பிரிக்கப்பட்ட புதிய வட்டமான அஞ்செட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, வட்டார மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் மின் மயானம் ஏற்படுத்த வேண்டும்.

### வேளாண் நிதிநிலை அறிக்கை





வேளாண் துறைக்கு கடந்த ஆண்டைவிட 3,327 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கின்றேன். கடந்த மூன்று ஆண்டுகளில் ஒன்றை லட்சம் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியது போல், நடப்பு ஆண்டிலும் 50 ஆயிரம் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறேன்.

இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்க பயிர் காப்பீடு திட்டத்திற்கு ரூ.1775 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்தை தனியாருக்கு வழங்காமல் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

கொப்பரைத் தேங்காய்க்கு உரிய விலை, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம், கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

பண்ணை சாரா கடன்களுக்கான வட்டி விகிதம் 9 விழுக்காட்டில் இருந்து 6 விழுக்காடாக குறைக்கவும், விவசாயிகள் விளைவிக்கின்ற அனைத்து விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மூத்த தலைவர்கள் தா.பாண்டியன், எம்.காத்தமுத்து நினைவு நாள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தா.பாண்டியன், விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.காத்தமுத்து ஆகியோரது நினைவு நாள் தமிழ்நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

**கோவை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன், முன்னாள் மக்களவை உறுப்பினர் எம்.காத்தமுத்து நினைவு நாளை ஒட்டியும் கோவை ஜீவா இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., தா.பாண்டியன் படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி உரை நிகழ்த்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் காத்தமுத்து படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம்.செல்வராஜ், பி.மௌனசாமி, கே.ரவீந்திரன், எஸ்.மோகன், கே.வெங்கடாசலம், சாந்தி சந்திரன், எஸ்.பி.குட்டி வரவேற்றார்.தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில சிறப்பு தலைவரும்,முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான ந.நஞ்சப்பன கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தேவராசன்,மாவட்ட செயலாளர் கலைச்செல்வம், மாநிலக்குழு சின்னசாமி,மாவட்ட துணை செயலாளர் மாதேஸ்வரன்,மாவட்ட பொருளாளர் மாதையன்,ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.மணி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தி பேசினார்கள்.

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் கட்டட சங்க மாவட்டத்தலைவர் குழந்தைவேலு தலைமையில் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.மணி, நிர்வாகிகள் ஏ.சி.மணி, சிவன், ஏ.முருகேசன், மனோகரன், சாமிநாதன், சண்முகம், சின்னசாமி உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கோபால் தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தா.பாண்டியன், எம்.காத்தமுத்து நினைவு தினம் இலளிகம்




வி.ஆர்.பாண்டியன், ஆர்.துரைசாமி, மு.வ.கல்யாணசுந்தரம், கே.புருசோத்லமன், வெ.வசந்தகுமா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலம் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் மாலை அணிவித்தார். ஏஜஎஸ்எப் மாநில செயலாளர் பா.தினேஷ், ஏஜஒய்எப் மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ், மாவட்ட தலைவர் கே.பி.வி.ராஜேஷ், மாவட்ட குழு, இடைக்குழு செயலாளர்கள் எஸ்.சம்பத், ஆர்.எல்.முத்துராஜகோபால், எஸ்.முகமது ஷபி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெத்தநாயக்கன்பாளையத்தில் சிபிஐ, சிபிஐ(எம்) சார்பாக மாலை அணிவிப்பு அஞ்சலி நிகழ்ச்சிக்கு சிபிஐ நகர செயலாளர் எஸ்.முருகன் தலைமை வகித்தார். மாவட்டக்குழு உறுப்பின் ஈஆர்கே, நகர துணைச்செயலாளர் என்.லோகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ(எம்) கே.ராமசாமி உரையாற்றினார். நகர துணைச் செயலாளர் எம்.அர்ச்சுனன் நன்றி கூறினார்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், நிர்வாக குழு உறுப்பினர் ராஜோந்திரன் நடராஜன், கண்ணன், கோவிந்தன், பால்சாமி கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தா.பாண்டியன் அவர்களின் 3ம் ஆண்டு நினைவு தினம் இண்டூர்பாப்பாரபட்டி சாலையில் உள்ள சகாதேவன் காலனியில் அனுசரிக்கப்பட்டது.அதனை தொடர்ந்து கருத்தரங்கம் நடைபெற்றது. வட்டார செயலாளர் மாது தலைமை வகித்தார். வட்டார துணை செயலாளர்கள் மாதையன், மணி, பொருளாளர் மாணிக்கம் முன்னிலை வகித்தனர்.வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர் கிராம சங்க செயலாளரும் மாநிலக்குழு உறுப்பினருமான அலமேலுஎத்துராஜ் தலைமையில் கடைபிடிக்கப்பட்டது, தியாகிகள் படத்திற்கு சங்க மாநில செயலாளர் ஜெ.பிரதாபன் மலரஞ்சலி செலுத்தி நினைவு தின உரை நிகழ்த்தினார். இதில் சங்க நல்லம்பள்ளி ஒன்றிய பொருளாளர் ஆர்.மல்லையன், ஒன்றிய துணைத்தலைவர் என்.முருகேசன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் காளியம்மாள், கோவிந்தம்மாள், ராணி, தடங்கம் மாரியப்பன் ஆகியவர்கள் கலந்துக் கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம் எதிரே கட்சியின் மாவட்ட செயலாளர் சீனிவாசன் தலைமையில் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர். இதில் வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், சீர்காழி ஒன்றிய செயலாளர் வே.நீதிசோழன், மாவட்ட குழு உறுப்பினர் ப.ஜெயகுமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் தா. பாண்டியன் அவர்களுடைய திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில், மாவட்ட கட்சி அலுவலகத்தில் புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ்குமார் தலைமையில் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா முன்னிலையில் தா.பா படத்திற்கு மாலை அணிவித்து மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் நினைவு பேருரை ஆற்றினார்.

தொடர்ந்து ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் க.இப்ராகிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருச்சி மேற்கு பகுதி 9வது வார்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிளைச் செயலாளர் ஆனந்த் தலைமை வகித்தார்.

# கூவத்தூர் கூத்து



இளசை கணேசன்

கூவத்தூர் கூத்து மீண்டும் சர்ச்சையாகி இருக்கிறது! சமூக ஊடகங்கள் தகிக்கின்றன.

ஒன்று பணம் சுருட்டல் சம்பந்தமானது இதில், இரண்டு குற்றச்சாட்டுகள்.

◆ வேலை வாங்கி தருவதாக ரூ. 40 லட்சம் ஏமாற்றப்பட்டுள்ளது.

◆ எம்.எல்.ஏ.வாக இருந்த காலத்தில் 800 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து சேர்க்கப்பட்டுள்ளது.

மற்றொன்று, கூவத்தூர் கூத்து சம்பந்தமானது. இதிலும் இரண்டு குற்றச்சாட்டுகள்.

◆ ஆட்சியைத் தக்கவைக்க கோடிக்கணக்கில் பணம் தண்ணீராக வாரி இறைக்கப்பட்டுள்ளது.

◆ குடி, கூட்டிக்கொடுத்தல், கூத்து, கும்மாளம் போன்றவை அரங்கேறி இருக்கிறது.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் சுருட்டுவது முதலாளித்துவக் கட்சிகளின் பிறவிக்குணம்.

அதிகாரம் என்பது சர்க்கரைப் பானை. அதற்குள் கைவிட்ட பின்பு அதை நக்கமால் இருக்க முடியுமா?

**அதிகார மமதையில் அறுவறுக்கத்தக்க ஆணாதிக்கம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.**

சொந்தக் கட்சிக்குள்ளேயே, அதுவும் கட்சித் தலைவியான ஜெயலலிதா பயன்படுத்திய கொடநாடு பங்களா உள்ளேயே கொள்ளையும், கொலையும் அரங்கேற்றி இருப்பது சாதாரணமானதல்ல.

இதை ஒப்பிடும்போது கூவத்தூர் கும்மாளம் ஆச்சரியமானதல்ல.

**“ஒடுங்கி இரு அல்லது ஓடிவிடு” என்று ஆளுமை செலுத்தி வந்த அம்மையார் ஜெயலலிதா உயிரோடு இல்லை.**

**அடுத்து அதிகாரத்தை அடையத் துடித்த சசிகலாவுக்கும் வாய்ப்பு இல்லை.**

அடிமைச் சங்கிலி அறுபட்டதைப் போல் சுதந்திரமாக கூவத்தூர் கூத்து கொண்டாடப்பட்டு இருக்கிறது.

அரசியலில் எடுத்துக்காட்டாய் வாழ்வது அருகிவிட்டது! கட்டுக் கட்டாய் எடுத்துக்கட்டுவது அதிகரித்துவிட்டது.

ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி சுருட்டப்பட்ட பணம் அதிகாரத்தை தக்க வைக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது அவ்வளவுதான்!

◆ லட்சக்கணக்கில் பணம் ஏமாற்றப்பட்டதா?


◆ கோடி கணக்கில் சொத்து சேர்க்கப்பட்டதா?

◆ எம்.எல்.ஏக்களுக்கு கோடிக்கணக்கில் வாரிக் கொடுக்கப்பட்டதா?

◆ கூவத்தூரில் கூத்து நடந்ததா?



என்பது பற்றி எல்லாம் புலனாய்வு செய்வது நமது பணி அல்ல. ஆனாலும் பாரா முகமாய் இருந்துவிட முடியாது.



நமது கேள்வி என்னவென்றால்...

◆ மேற்கண்ட நான்கு குற்றச்சாட்டுகளும் புதியவை அல்ல. அரசல் புரசலாக ஏற்கனவே வெளிவந்தவை தான். இப்போது தேர்தல் நேரத்தில் மீண்டும் பீரிட்டு வெளிவரக் காரணம் என்ன?

◆ வேலை வாங்கித் தருவதாக ஒன்றியச் செயலாளரை முன்னாள் எம்.எல்.ஏ. ஏமாற்றிவிட்டார் என்றால், முன்னாள் எம்.எல்.ஏ.விடம் கொடுக்கப்பட்ட பணம் யாருடையது? யாருக்கு? எத்தனை பேருக்கு? வேலை வாங்கி தருவதாக ஏமாற்றி பறிக்கப்பட்டது?

◆ ரூ. 800 கோடி சொத்து சேர்க்கப்பட்டுள்ளது என்றால் வருமானவரித்துறை மற்றும் அமலாக்கத்துறைக்குத் தெரியாமல் போனது ஏன்? என்ன செய்து கொண்டிருந்தது?

◆ எம்.எல்.ஏ.க்களைத் தக்கவைக்க கோடிக்கணக்கில் பணமும், தங்கமும் ஒருவரால் வாரிக் கொடுக்கப்பட்டது என்றால் அது யார்? எப்படி முடிந்தது?

◆ குற்றச்சாட்டுளை பொய் என்று நிரூபிக்கவில்லை எனில் வருமான வரித்துறையும், அமலாக்கத்துறையும் என்ன செய்ய வேண்டும்?

◆ குற்றச்சாட்டை பொய் என்று நிரூபிக்க எடப்பாடி பழனிசாமி தயாரா?

◆ குற்றச்சாட்டை பொய் என்று நிரூபிப்பதற்கு முன்பே குற்றச்சாட்டு சொன்ன வரையே கட்சியிலிருந்து நீக்கி இருப்பது ஏன்?

◆ குற்றச்சாட்டு கூறுபவருக்கு திடீரென்று துணிச்சல் வரக் காரணம் என்ன? பின்னணியில் இருப்பது யார்?

◆ கூட்டணிக் கதவை திறந்து வைத்தும் அதிமுக உள்ளே வர மறுப்பதால் அந்தக் கட்சியை பலவீனப்படுத்தும் முயற்சியா?

**குறிவைத்து அம்பு எய்தவரை விட்டுவிட்டு கூட வந்தவரை துரத்தினால் போதுமா?**

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தேடும் பொறுப்பு வாக்காளர்களுக்கு இருக்கிறது.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை மாவட்ட அமைப்பு தொடக்கம்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர்களின் மயிலாடுதுறை மாவட்ட அமைப்பு கூட்டம் சீர்காழியில் ஆர்.தமிழ் மலர் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி, செம்மனார் கோயில், கொள்ளிடம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து சுகாதார மற்றும் ஊரக தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்ட தலைவராக சித்ரா, மாவட்ட செயலாளராக தமிழ் மலர், மாவட்ட பொருளாளராக லட்சுமி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இதில் மாநில பொதுச் செயலாளர் கிருஷ்ணசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் ஆர்.அன்பரசன், ஏ ஐ டி யு சி மாவட்ட பொதுச் செயலாளர் கே.ராமன், சிபிஐ மாவட்ட செயலாளர் அ. சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் மருத்துவமனை தரம் உயர்த்துக

**ஏ.ஐ.ஒய்.எப். வலியுறுத்தல்**

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி 15வது மாநாடு மக்கள் இல்லத்தில் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர்.ஜிஆர்.இரவிந்திரநாத் கொடியினை ஏற்றிவைத்தார். கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர் வீ.வீராசாமி, ஐப்சோ மாவட்ட செயலாளர் ம.முருகன், இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இதில் தொகுதி குழு தலைவராக க.முருகன், துணை தலைவர்களாக கே.கீர்த்தனா, கு.அய்யனார், செயலாளர் செ.இன்பராஜ், துணைச் செயலாளர்களாக ச.சரண்யா, எஸ்.பழனி, பொருளாளராக எம்.சேட்டு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் நிறைவுரையாற்றினார்.

மெய்யூர் இருகுன்றபள்ளி இடையே பாலாற்றில் தடுப்பனை கட்டவேண்டும், மதுராந்தகம் மருத்துவமனையை தரம் உயர்த்தி போதியளவு மருத்துவர்கள் நியமிக்கவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குமரி மாவட்ட முன்னாள் செயலாளர்

# கே.சந்திரபாபு 11ஆம் ஆண்டு நினைவு நாள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட மஞ் சாலுமூடு கிளையின் சார்பாக, கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் கே.சந்திரபாபு அவர்களின் 11ம் ஆண்டு நினைவு பொதுக்கூட்டம் ஒன்றிய கவுன்சிலர் ஏ.டென்னிசன் தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு மேல்புறம் மஞ்சாலுமூடு கிளைச் செயலாளர் விஸ்வநாதன் அனைவரையும் வரவேற்றார். கட்சியின் குமரி மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.அனில்குமார், ஜி.சுரேஷ்மேசியதாஸ், பழங்குடி மக்கள் சங்க பொறுப்பாளர் சுகுமாரன், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் செல்வராணி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், இறுதியாக கேரள மாநில முன்னாள் துணை சபாநாயகரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.சசி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் மரியதாஸ், காரோடு கிளைச் செயலாளர் குமார் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

# வினாடி - வினா விடைகள்

1. ‘லேபர் கிசான் கெஜட்’ வார இதழ்
2. தானியக் களஞ்சியம்
3. 1000 கிலோ
4. ஒசோன்
5. கன்னியாகுமரி
6. உருகுதல்

# சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள்

மூத்த பொதுவுடைமை இயக்க தலைவர், சிந்தனை சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா நடைபெற்றது.

**சென்னை:** சிந்தனை சிற்பி ம.சிங்காரவேலரின் 164வது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அவருடைய படத்திற்கு மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ். எம்.எல்.ஏ., வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஜெய்சங்கர் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பிறந்த தின விழா நடைபெற்றது. அவரது படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது. சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார, மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், வட்ட செயலாளர் செல்வம் ,துணை செயலாளர் பெரியண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**திருவள்ளூர்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட குழு சார்பில், சோழவரம் ஒன்றிய செயலாளர் கே. குமரேசன் தலைமையில் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், மாவட்ட துணை செயலாளர் எம். பி. குமார், மாவட்டத் துணைத் தலைவர் சி. சுப்பிரமணி, சங்கத்தின் மூத்த தலைவர் கே. வி. செங்கொடி செல்வன், விவசாய சங்க மாவட்ட தலைவர் என். ஜீவா, இளைஞர் பெருமன்றத்தின் மாநில குழு உறுப்பினர் எச். பிரபு, சங்கத்தின் நிர்வாகிகள் ஆர் பஞ்சநாதன், எ.உஷாராணி, ஜி. எம். சம்பத், மு.ரவிச்சந்திரன், பி.வெங்கடேசன் வி.பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# கைத்தறி நெசவுக்கு ஜி.எஸ்.டி.யிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்க வேண்டும்

**சம்மேளன மாநில மாநாடு வலியுறுத்தல்**

காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில மாநாடு என்.எஸ்.பெருமாள், ஜி.மணி மூர்த்தி, எல்.தங்கராசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

காமாட்சி அம்மன் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மேனாள் தலைவர் பா.ஸ்டாலின் மாநாட்டு கொடியினை ஏற்றி வைத்தார்.

சம்மேளனத்தின் துணைத் தலைவர் வ சித்தையன், இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தார். சம்மேளனத்தின் துணைச் செயலாளர் அ.மூர்த்தி வரவேற்புரையாற்றினார்.




ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் எம் ராதாகிருஷ்ணன், சிறப்புரையாற்றினார். ஏஐடியூசி தேசியக் குழு உறுப்பினர் சி சந்திரகுமார்,ஏஐடியூசி அமைப்பு சாரா தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆர் தில்லைவனம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ப.கார்த்திக், துணைச் செயலாளர் பி.வி.சீனிவாசன், அரசுப் பணியாளர் சங்க காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் வெ.பாலாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பி.ராதா வேலை அறிக்கையினை முன்வைத்துப் பேசினார். கௌரவத் தலைவராக எஸ்.பி. ராதா, தலைவராக ஜி.மணி மூர்த்தி, பொதுச்செயலாளராக என்.கே.ராஜன், பொருளாளராக வேல்சாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள். செயலாளர்களாக என்.எஸ். பெருமாள், ஏ.மூர்த்தி, மு.வரதராஜன், துணைத் தலைவர்களாக வ.சித்தையன், சென்றாயப் பெருமாள், தாமோதரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஜிஎஸ்டி வரி விதிப்பில் இருந்து கைத்தறி நெசவுத் தொழிலுக்கு முழுவதுமாக விதிவிலக்கு வழங்கப்பட வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் வழங்கப்படுகின்ற ரிபேட் மானிய அளவை மாற்றி அமைக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்களின் விலைவுகள் மற்றும் இன்றைய கச்சாப் பொருள் விலை உயர்வுக்குஏற்ப ரிபேட் மானியத் தொகையை மாற்றம் செய்து சேலைகளின் விற்பனை விலைக்கு ரிபேட் மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

நெசவாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படைக் கூலியினை மாற்றி அமைக்க வேண்டும்.

அடிப்படைக் கூலியுடன் அகவிலைப்படியை இணைத்து அதன் பின்னர் கூலி உயர்வு அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பழங்குடி விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றாதே!

# விதொச ஆர்ப்பாட்டம்



கூவத்தி, ஆலடபட்டி கிராமங்களில் உழுது பயிர் செய்து வரும் பழங்குடி மற்றும் சிறு குறு விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சிக்கும் வனத்துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். எம்.சிவநாதன், ஜி.வி.கிருஷ்ணமூர்த்தி, பி.சுப்பிரமணி, பி.திருப்பதி, ஒய்.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் வி.சின்னசாமி துவக்கி பேசினார். போராட்டத்தை விளக்கி மாவட்ட தலைவர் எஸ்.கண்ணு, மாவட்ட செயலாளர் ஆர்.சேகர், விவசாய சங்க வட்ட தலைவர் சிவராஜ், விவசாய சங்க மாவட்ட செயலாளர் பி. பழனி ஆகியோர் விளக்கி பேசினார்கள். இந்த போராட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட பொருளாளர் சக்கரவர்த்தி, பர்கூர் வட்ட செயலாளர் பூபேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## செவிலியர்களுக்கு மீண்டும் பணி: அமைச்சருக்கு நன்றி



எம்.ஆர்.பி. கோவிட் செவிலியர்களுக்கு, மீண்டும் பணி வழங்கியதற்கு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், எம்.ஆர்.பி கோவிட் செவிலியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ராஜேஷ், மாநில நிர்வாகி பிரபு ஆகியோர் நேரில் சந்தித்து நன்றியை தெரிவித்தனர்.

## சென்னைப் பல்கலைக்கழகத்தை பாதுகாக்க வலியுறுத்தி
# மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்!



சென்னை பல்கலைக்கழகத்தின் கணக்குகளில் தணிக்கை ஆட்சேபனைகளை (Audit objections) காரணம் காட்டி தமிழ்நாடு அரசு நிறுத்திய நிதியை மீண்டும் வழங்கக் கோரியும், பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்குகளை வருமான வரித்துறை முடக்கியதைக் கண்டித்தும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை பல்கலைக்கழக நுழைவுவாயில் முன்பு நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்கு மாணவர் பெருமன்றத்தின் தென்சென்னை மாவட்டச் செயலாளர் ஆ.மணிகண்டன் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் க. இப்ராகிம் கண்டன உரையாற்றினார். சென்னை பல்கலைக்கழகத்தை பாதுகாக்க வலியுறுத்தியும் தனியாருக்குத் தாரைவார்க்கும் சூழ்ச்சியைக் கண்டித்தும் முழக்கமிட்டனர். போராட்டத்தில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# உளுந்துக்கு உரிய விலைகேட்டு சாலை மறியல்



உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 10 நாட்களுக்கு மேலாக நாள் ஒன்றுக்கு 3000 மூட்டைக்கு மேல் உளுந்து கொள்முதல் நடைபெற்று வந்த நிலையில், 1 மூட்டை உளுந்து 10 ஆயிரத்து 900ரூபாய் வரை விற்பனையானது. கடந்த சில நாட்களாக 1 மூட்டை உளுந்து 9450 ரூபாய்க்கு விற்பனையானதால் குறைந்த விலைக்கு கொள்முதல் நடைபெற்றதை கண்டித்து சுமார் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உளுந்தூர்பேட்டை – சென்னை சாலையில் மறியல் போராட்டம் காரணமாக அந்த சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலையில், தகவல் அறிந்த உளுந்தூர்பேட்டை போலீசார் விவசாயிகளிடம், ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் அழைத்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

## பட்டுக்கோட்டையில் கலை இலக்கிய விழா

பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றமும், மேக்ஸ் அருள் பவுண்டேஷன் இணைந்து நடத்திய கலை இலக்கிய விழா நிகழ்ச்சி புலவர் மூ.முத்துவேல் நினைவு அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்தவர்களை தர்மராஜ் வரவேற்றார்.

விழாவில் ஜீவா மணிக்குமார், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற பொதுச்செயலாளர் அறம், பட்டுக்கோட்டை கவிக்குயில் மருத்துவர் செல்லப்பன், மேக்ஸ் அருள் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் அருள்சூசை, கட்சியின் மாநில குழு உறுப்பினர் டி.லெனின், தஞ்சை மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில செயற்குழு உறுப்பினர் ஆசிரியர் இராமலிங்கம், பட்டுக்கோட்டை வழக்கறிஞர் பிரகாசம், ஆசிரியர் கல்யாண சுந்தரம், காவல் உதவி ஆய்வாளர் வீரையன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காவல் உதவி ஆய்வாளர் ஆம்பல் சிவஞானம் எழுதிய சிறகை விரி என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டது.

## ம.சிங்காரவேலர் 78வது நினைவு நாள்

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் கெடிலத்தில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் எம். வெங்கடேசன் தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் கே.இராமசாமி, ஏஐசிடியூ மாவட்ட தலைவர் எம்.கலியபெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நாகை:** நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம்,காமேஸ்வரம் கிராமத்தில் சிங்காரவேலர் நினைவுதினம் கட்சியின் மாநில குழு உறுப்பினர் டி.செல்வம் தலைமையில் நடைப்பெற்றது. இதில், சிபிஐ மாவட்ட செயலாளர் சிவகுருபாண்டியன், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் என்.அமிர்தராஜா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் நாக.அருட்செல்வன், தமிழ்நாடு சிறுபான்மை வாரிய உறுப்பினர் ஏ.பி.தமீம் அன்சாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் சிங்காரவேலரின் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## அரசால் வழங்கப்பட்ட நிலத்தை ஒப்படைக்க கோரி
# சூலூரில் ஆர்ப்பாட்டம்



கோவை மாவட்டம், சூலூர் தாலுக்கா, இருகூர் கிராமத்தில் கடந்த 2001ஆம் ஆண்டு 292 பேருக்கு ஆதி திராவிடர் நலத்துறையின் சார்பில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

23 ஆண்டுகள் கடந்த பின்பும், பட்டா பெற்ற பயனாளிகளுக்கு இதுவரை வீட்டு மனைகளை அளவீடு செய்து ஒப்படைக்கப்படவில்லை.

இதனைக் கண்டித்து இருகூர் சுங்கம் மைதானத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக்குழு உறுப்பினர் பி.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இயக்கத்தின் கோவை மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி, கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, சூலூர் தெற்கு வட்டார குழுவின் செயலாளர் வே.வசந்தகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

சூலூர் தெற்கு துணை செயலாளர் வீ.பேரின்பம், ஏஐடியுசி மாவட்டப் பொருளாளர் பி.சுப்பிரமணியம், இஸ்கஃப் பொருளாளர் ச. கோட்டியப்பன், இருகூர் கிளைச் செயலாளர் ஆர்.வீராசாமி, முன்னாள் கவுன்சிலர் ஆ.பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் நாடாளுமன்ற தேர்தல் நிதியளிப்பு பேரவை



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற தேர்தல் நிதியளிப்பு மாவட்ட சிறப்பு பேரவை மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் ஆர்.இடும்பையன், பெ.வீரராஜ் முன்னிலையில், மாவட்ட துணை செயலாளர் கே.ராமன் வரவேற்று பேசினார். மாநில செயலாளர் இரா.முத்தரசன் மற்றும் நாகை நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில நிர்வாகக்குழு உறுப்பினருமான எம்.செல்வராசு நிதியினை பெற்று சிறப்புரையாற்றினார்கள். இதில் மாவட்ட நிர்வாக குழு, பொதுக் குழு, கிளை செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் தில்லுமுல்லுகளை தடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தேர்தல் தில்லுமுல்லுகளை தடுத்து நிறுத்தவும், 100% சதம் ஒப்புகைச் சீட்டு வழங்கவும் வலியுறுத்தி கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில், விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ.அசரப் அலி, கட்சியின் மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி. மணிபாரதி, காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.சரவணகுமார், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மாநகர் மாவட்ட செயலாளர் கணபதி செல்வராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில கொள்கை பரப்பு செயலாளர் சிபி சந்தர், நிலா மணிமாறன், அப்பன் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஒகேனக்கலில் விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் நடைபெற்றது. மாநில தலைவர் எஸ்.குணசேகரன் தலைமை வகித்தார். மாநில பொது செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி இன்றைய அரசியல் சூழ்நிலை, மாவட்ட, மாநில மாநாடுகள் மற்றும் வேலை அறிக்கை வைத்து பேசினார்.

கூட்டத்தில் மாநில துணைத்தலைவர் எம்.லகுமய்யா, மாநில துணைச் செயலாளர்கள் துளசிமணி, இந்திரஜித், பழங்குடி மக்கள் சங்க மாநில சிறப்பு தலைவர் ந.நஞ்சப்பன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பழனி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், விவசாய சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் எஸ்.சின்னசாமி, மாவட்ட தலைவர் ஜி.விடுதலைவிரும்பி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் ஒகேனக்கல் உபரிநீர் திட்டத்தை செயல்படுத்தி தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளில் நிரப்பி விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்.கா்நாடக அரசு மேகேதாட்டில் அணை கட்ட முயற்சி செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும். தருமபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து இழப்பீடு வழங்கவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 153. விஞ்ஞானம்

**விஞ்ஞானம் என்பதி யாதெனின் எஞ்ஞான்றும்**
**உண்மையைத் தேடு மது.**


அறிவியல் (விஞ்ஞானம்) எனப்படுவது எப்போதும் உலகில் உள்ள உண்மைகளைத் தேடிக் கண்டு பிடிப்பதேயாகும். (ஒளிந்திருக்கும் உண்மைகள்).

**ஆகம ஆய்வை அகற்றி அனைத்திற்கும்**
**ஆதாரம் தேடு மது.**

அறிவியல்வழிபுராணஇதிகாசசடங்காச்சாரங்களைப் புறக்கணித்து விட்டு (இயற்கையின் நுணுக்கமான) உண்மைநிலைகளை ஆதாரத்துடன் ஆய்வுசெய்கிறது.

# நூல் நயம்

## மக்கள் நலக் கூட்டணியின் அரசியல்




தமிழ்நாட்டை ஏறக்குறைய 50 ஆண்டு காலத்திற்கு மேலாக திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்கின்ற இரண்டு கட்சிகளின் தலைவர்களே மாறி, மாறி ஆட்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். இவற்றுக்கு மாற்றாக கொள்கை ரீதியான குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில, ஒரு மாற்று அமைய வேண்டும் என்கிற நோக்கத்தில். 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து மக்கள் நல கூட்டு இயக்கம் உருவானது. இதுவே பின்னர் விரிவுபட்டு மக்கள் நல கூட்டணியாக அமைந்தது. தேர்தலுக்கு முன்பும், தேர்தல் சமயத்திலும் மக்கள் நல கூட்டணியின் பிரச்சாரம் மக்களிடத்தில் நல்ல வரவேற்பு பெற்றாலும், மக்கள் நல கூட்டணியால் வாக்குகளை பெற்று வெற்றி பெற இயலவில்லை. அதன் காரணங்கள் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகால ஆட்சியின் சாதனை என்ன?. மனித வள மேம்பாடு என்பதைக் கொண்டுதான் வளர்ச்சியை அளவிட முடியும். அளவிட வேண்டும். வேறு அடிப்படைகள் கிடையாது. மனித வளம் இல்லையென்றால் அது நாட்டின் வளர்ச்சியாகவே கூற முடியாது. மனித வளம் என்பது பொருளாதார வளர்ச்சி என்பது மட்டுமல்ல, சமூக மேம்பாடு, பண்பாட்டு மேம்பாடு, ஜனநாயக மேம்பாடு, ஆட்சி நிர்வாக மேம்பாடு போன்று பன்முகத் தன்மைகளை உள்ளடக்கியதாகும். பிரதானமானது பொருளாதார வளர்ச்சி என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. எனவே, இவற்றை வைத்து தான் தமிழ்நாட்டின் வளர்ச்சியை நாம் கணக்கிட வேண்டும் என நூலாசிரியர் மிகச் சரியாகவே விளக்கியுள்ளார்.

தமிழ்நாடு பல வகைகளில் முன்னேற்றம் கண்டிருந்தாலும லஞ்சம், ஊழலை தவிர்த்து, மதுவின் கேட்டை தவிர்த்து, சமூக நீதி, தமிழக வளர்ச்சி, ஜனநாயக மறுமலர்ச்சி என்கிற வகையில் முன்னேறுவதற்கு மக்கள் நல கூட்டு இயக்கத்தின் தேவை அவசியமானதாகும்.. எதிர்காலத்தில் மக்கள் நலனை முன் வைக்கிற ஜனநாயக, இடதுசாரி கட்சிகளின் கலங்கரை விளக்கமாக மக்கள் நல கூட்டு இயக்கத்தின் படிப்பினைகள் அமையட்டும் என்கிற நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : இளசை எஸ்.எஸ்.கணேசன்**
**பக்கம் : 118** விலை : 100
**வெளியீடு : அரிகரன் சேவை டிரஸ்ட், எண் 1, 12 வது லேன், கே.கே.ரோடு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை–53**

## ஜெயகாந்தனும் ஜானகிகாந்தனும்




எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களுடைய ஆளுமையும், அவரது திரைப்பட முயற்சிகளையும், அதன் சிறப்புகளையும் கார்த்திகேயன் அவர்கள், ஜெயகாந்தனும் ஜானகி காந்தனும் என்கிற இந்நூலில் சிறப்பாக எழுதி உள்ளார். புதுமைப்பித்தன், விந்தன் ஆகியோரது பாதையில் முற்போக்கு இலக்கியத்தை நகர்த்தி சென்றதில் ஜெயகாந்தன் அவர்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. ஜெயகாந்தன் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று அறிவித்துக் கொண்டவர். அவரது கதைகளில் சமூகப் பொறுப்புணர்வும், அக்கறையும், எதார்த்தமும் இரண்டறக் கலந்து இருக்கும். பல்வேறு தளங்களில் இவர் சந்தித்தவர்களின் வாழ்க்கையே கதாபாத்திரங்களாக மாறின. அவர் வாழ்ந்த பல இடங்களே அவரது கதைகளின் களமாக மாறியது. நாம் அன்றாடும் வாழ்க்கையில் சந்திக்கிற எதார்த்தமான மனிதர்களை பாத்திரங்களாக்கி அவைகளின் மூலம் சிறப்பான கதைகளை படைக்க முடியும் என்பதை ஜெயகாந்தன் அவர்களின் கதைகள் நமக்கு உணர்த்துகின்றன.

சமூகத்தின் அடித்தட்டு மக்களை கதாபாத்திரங்களாக்கி உலவ விட்டவர் ஜெயகாந்தன். இதற்கு அவர் உள்வாங்கிக் கொண்ட கம்யூனிச சித்தாந்தமும், அதன் தாக்கமுமே காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் தான் எழுத்து எனக்கு ஜீவனம் அல்ல, அது என் ஜீவன் என்று சொன்னவர் ஜெயகாந்தன்.

பாரதியின் மீதும், அவனது பாடல்களின் மீதும் அளவற்ற பற்று கொண்டவர். பாரதியை பற்றி பேசுகிறபோது ஆவேசத்துடன் ஜீவாவை போல் பேசுவார். பாரதி போன்றே பெண்ணுரிமை மீது மிகுந்த பற்று கொண்டவர். அவர் இயக்கிய உன்னைப் போல் ஒருவன் திரைப்படம் தேசிய அளவில் ஜனாதிபதி பரிசு பெற்றது. எழுத்து, பேச்சு, திரைப்பட முயற்சி அனைத்தும் எளிய மக்களின் வாழ்க்கை உயர்த்துவதற்காக பயன்படுத்தியவர் ஜெயகாந்தன். ஜெயகாந்தன் அவர்களையும், ஜானகி காந்தன் அவர்களையும் ஒப்பீடு செய்தும், வேறுபடுத்தியும் எழுதப்பட்ட நூல் தான் இந்நூல். அனைவரும் வாங்கி படிக்கவும்.

**–சமரன்**

**நூலாசிரியர் : கார்த்திகேயன்**
**பக்கம் : 96** **விலை: 120**
**வெளியீடு : புரட்சி பாரதி பதிப்பகம், எண் 1, மோரை சரத் கண்டிகை மெயின் ரோடு, மோரை புலி குட்டி கிராமம், நாகூர் ஆண்டவர் நகர், ஆவடி, சென்னை – 55.**

# கலை இலக்கியப் பூங்கா

## புதிய கிளை தொடக்க விழா

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியில் மத்தூரில் புதிய கிளை தொடங்கப்பட்டது.

இதில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் கணபதி இளங்கோ, மாவட்ட செயலாளர் கவிஞர் சி.மாரி, மாவட்ட பொருளாளர் எஸ்.பாலாஜி, மாவட்ட பொறுப்பாளர்கள் பலராமன், சுந்தர், வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை செயலாளராக மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திருப்பூரில் லெனின் நூற்றாண்டு

திருப்பூர் வடக்கு மாநகரம் மாமேதை லெனின் நூற்றாண்டு நினைவு நிகழ்வு, இலக்கிய நிகழ்வுகள் திருப்பூர்,பி.கே.ஆர்.இல்லத்தில், எஸ்.சண்முகம் தலைமையில் துவங்கியது. தோழர்கள் பி.ஆர். நடராசன், ஏ.வி.பழனிச்சாமி, த.சசிகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். எஸ்.ஏ.காதர் வரவேற்பு உரையை நிகழ்த்தினார்.

பட்டுக்கோட்டை ஆசிரியர் பாலு, ஈரோடு மாவட்டச் செயலாளர் ஓடை துரையரைசன், எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். பாரதி சுப்பராயன், ஆசிரியர் என்.அய்யாவு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## ‘ம. சிங்காரவேலரின் அறிவியல் சிந்தனைகள்’ நூல் வெளியீட்டு விழா

மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் எழுதிய ‘ம.சிங்காரவேலரின் அறிவியல் சிந்தனைகள்’ என்ற நூலை ஈரோடு எம்.கல்யாண சுந்தரம் இல்லத்திலுள்ள கே.டி. ராஜு அரங்கில் ஈரோடு மாவட்டச் செயலாளர் ஓடை.பொ. துரைஅரசன் தலைமையில் வெளியிடப்பட்டது. திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன் வெளியிட, வழக்கறிஞர் ப.பா. மோகன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.




கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு, விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி, கட்சியின் வடக்கு மாவட்டச் செயலாளர் சு. மோகன் குமார், தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி. பிரபாகரன், மக்கள் சிந்தனைப் பேரவையின் செயலாளர் ந. அன்பரசு, கட்சியின் ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி. கல்யாணசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன், ஆய்வாளர் பா. வீரமணி ஆகியோர் விழாச் சிறப்புரையாற்றினர். நூலாசிரியர் த. ஸ்டாலின் குணசேகரன் ஏற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ம. சிங்காரவேலரின் திருவுருவப்படம் திறக்கப்பட்டது. ‘சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. ஆய்வாளர் பா. வீரமணிக்கு ‘சிங்காரவேலர் விருது’ வழங்கப்பட்டது.

## உலகத் தாய்மொழி நாள் விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம், கோவை மாநகராட்சி பி.என். புதூர் உயர்நிலைப்பள்ளி ஆகியவை இணைந்து உலகத்தாய்மொழி நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்களின் ஓவியம் மற்றும் பேச்சுப்போட்டிகளை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன் துவக்கி வைத்தார். போட்டிகளை ப.பா.ரமணி, எல்.ஜான், ஏ.ஜெ. செல்வின், கா.ஞானகுமார், எஸ்.திருநாவுக்கரசு, எஸ்.சசீதரன் ஒருங்கிணைத்தனர்.

முனைவர் த.திலிப்குமார் தலைமையேற்று தாய்மொழி நாளின் நோக்கங்களை எடுத்துரைத்தார். தலைமையாசிரியர் டெய்சி வரவேற்புரை வழங்கினார். நான்சி கோமகன் சிறப்புரையாற்றினார். இஸ்கஃப் பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், பவானி பி.என்.பாலு பாக்யலட்சுமி அறக்கட்டளைதலைவர் ப.பா. ஜீவானந்தம் ஆகியோர் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். நிகழ்வில் இலங்கை வடகிழக்கு மாகாண மேனாள் முதல்வர் வரதராஜப்பெருமாள், இஸ்கஃப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## “வாழ்க்கை காட்டிய வரிகள்” கவிதை நூல் வெளியீட்டு விழா

தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் முன்னோடித் தோழர் ராமானுஜம் ராகவன் எழுதிய “வாழ்க்கை காட்டிய வரிகள்” கவிதை நூல் வெளியீட்டு விழா கோவை தியாகிகள் நிலையத்தில் நடைபெற்றது. த.நா.க.இ.பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் ப.பா.ரமணி தலைமை தாங்கினார். தொழிற்சங்கத்தலைவர் கே.எம்.செல்வராஜ் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். வழக்கறிஞர் கே.சுப்ரமணியன், கவிஞர் கோவை காமு, முனைவர் த.திலிப்குமார், உஸ்மான் அலி ஆகியோர் கவிதைகளின் சிறப்புகளை விளக்கி வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் ராமானுஜம் ராகவன் ஏற்புரை நிகழ்த்தினார்.

## எல்லை. சிவக்குமார் எழுதிய சமூகநீதிக் குரல் நூல் வெளியீட்டு விழா

புதுச்சேரி எல்லை. சிவக்குமார் எழுதிய புதுச்சேரியில் சமூகநீதிக் குரல் நூல் வெளியீட்டு விழா கட்சியின் மாநில செயலாளர் அ.மு.சலீம் தலைமையில் நடைபெற்றது.

திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் துரை.சந்திரசேகரன் நூலினை வெளியிட கட்சியின் மூத்த தலைவர் ஆர்.விசுவநாதன் நூலினைப் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் திருமா.அன்புச் செல்வம் நூல் அறிமுகவுரை ஆற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் சிறப்புரையாற்றினார். திராவிடர் கழகத்தின் புதுச்சேரி மாநில தலைவர் சிவ. வீரமணி, ஏஐடியூசி தொழிற்சங்க பொதுச் செயலாளர் கு. சேது செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நூலாசிரியர் எல்லை.சிவக்குமார் ஏற்புரை வழங்கினார்.




## தேசியத் திரைப்பட விருதுகளில் இந்திரா பெயர் நீக்கத்திற்கு கண்டனம்

தேசியத் திரைப்பட விருதுப் பெயர்ப் பட்டியலில், “சிறந்த அறிமுக படத்திற்கான இந்திரா காந்தி விருது” என்ற பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வந்தது. இந்த விருதை ஒன்றிய அரசு “சிறந்த அறிமுக திரைப்பட இயக்குநருக்கான விருது” என்று மாற்றியுள்ளது.

“தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் சிறந்த திரைப்படத்துக்கான நர்கிஸ் தத் விருது” என்ற பெயரில் வழங்கப்பட்ட விருதை “தேசியச் சமூக மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புகளை ஊக்குவிக்கும் சிறந்த திரைப்படம்“ என்று மாற்றியுள்ளனர்.

இதை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் வண்மையாக கண்டிக்கிறது என்று த.அறம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தொ.மு.சி.யை கொண்டாடுவோம் கருத்தரங்கம்

காஞ்சி மாவட்டம் மறைமலை நகர் மக்கள் இல்லத்தில் “முற்போக்கு சாரதி தொ.மு.சி” எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க தேசிய செயலர் டி.எஸ்.நடராஜன் கருத்துரை வழங்கினார்.

கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட தலைவர் ஜீவா.மணிக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, மாநில செயற்குழு உறுப்பினர் மருத்துவர் ஏ.ஆர். சாந்தி முன்னிலை வகித்திட, மாவட்ட செயலர் சி. இராமலிங்கத்தின் கவிதை நூல் “தாய் மரங்கள்” குறித்து மாவட்ட பொருளாளர் எஸ்.சங்கரநாராயணன் அறிமுக உரை வழங்கினார். ஏஐடியுசியின் மாநிலத்தலைவர் காசி விஸ்வநாதன் தொ.மு.சி சிறப்புகள் குறித்துப் பேசினார். மாநிலக்குழு உறுப்பினர் சங்கர் சுப்பு இசைக்கும்மணி நன்றியுரை நல்கினார்.

■

வரலாறு காணாத வேலையின்மை, விலைவாசி உயர்வு, ஊழல்
"வெளியேற்றுவோம் பா.ஜ.க.வை"

பிப்ரவரி 25 முதல் மார்ச் 5 வரை

# தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடி மக்கள் சந்திப்பு இயக்கம்

## இரா.நல்லகண்ணு துவக்கி வைத்தார்

















பிப்ரவரி 25ந்தேதி தொடங்கிய மக்கள் சந்திப்பு இயக்கத்தை வடசென்னை தண்டையார்பேட்டையில் சுதந்திரப்போராட்டவீரர் ஆர்.நல்லக்கண்ணு தொடங்கிவைத்தார். சிபிஐ மாநிலத்துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலச்செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாணவர் பெருமன்ற அகில இந்தியப்பொதுச்செயலாளர் சீ.தினேஷ், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தென்சென்னை** தி.நகரில் மாவட்டத்தலைவர் வித்யா தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு இயக்கத்தை தி.நகர் சட்டமன்ற உறுப்பினர். ஜெ.கருணாநிதி தொடங்கிவைத்தார்.

**செங்கல்பட்டு** திருப்போரூரில் எம்.பார்த்திபன் தலைமையில் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

**காஞ்சிபுரத்தில்** மாவட்டத்தலைவர் சேகுவேராதாஸ் தலைமையில் நடைபெற்றது.

**வேலூரில்** கார்த்திக் பாபு தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். ஜி.லதா தொடங்கிவைத்தார்.

**கள்ளக்குறிச்சி** திருக்கோவிலூரில் மாவட்டசெயலாளர் எஸ்.விஜய் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாவட்டசெயலாளர் கே.ராமசாமி தொடங்கிவைத்தார்.

**கடலூர்** பண்ருட்டியில் மோகன் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாவட்டசெயலாளர் டி.துரை தொடங்கிவைத்தார்.

**திருப்பத்தூரில்** மாவட்டசெயலாளர் முரளி தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாவட்டசெயலாளர் எம்.சுந்தரேசன் தொடங்கிவைத்தார்.

**சேலத்தில்** மாவட்டசெயலாளர் இரா.ரமேஷ் தலைமையில் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது..

**திருப்பூர் மாநகரில்** மாவட்டஅமைப்பாளர் ஆ.அரவிந்த் குமார் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி தொடங்கிவைத்தார்.

**கோவையில்** மாவட்டசெயலாளர் வே.வசந்தகுமார் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். எம்.ஆறுமுகம் தொடங்கிவைத்தார்.

**திருச்சி புறநகர்** மாவட்டஅமைப்பாளர் தமிழரசன் தலைமையில் சிபிஐ மாவட்டசெயலாளர் எஸ்.ராஜ்குமார் தொடங்கிவைத்தார்.

**திருச்சி மாநகரில்** மாவட்டசெயலாளர் எம்.செல்வக்குமார் தலைமையில் தேசியக்கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் வி.செல்வராஜ் தொடங்கிவைத்தார்.

**திருவாரூரில்** மாவட்டசெயலாளர். துரை. அருள்ராஜன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். கோ.பழனிச்சாமி தொடங்கிவைத்தார்.

**தஞ்சை தெற்கு** மாவட்டசெயலாளர் கார்ல் மார்க்ஸ் தலைமையில் நடைபெற்றது.

**மதுரை புறநகரில்** மாவட்டசெயலாளர் கே.கிருஷ்பாக்கியம், தலைமையில் மாநிலக்கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் காளிதாஸ் தொடங்கிவைத்தார்.

**விருதுநகரில்** மாவட்டசெயலாளர் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

**திருநெல்வேலியில்** மாவட்டசெயலாளர் சுரேஷ் தலைமையில் சிபிஐ மாவட்டசெயலாளர் சடையப்பன் தொடங்கி வைத்தார்.

மக்கள் சந்திப்பு இயக்கத்தை வீடுதோறும் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் நேரிடையாக மக்களை சந்தித்து துண்டுபிரசுரம் விநியோகிப்பது தெருமுனைக்கூட்டங்களை நடத்துவது வாகனப்பிரச்சாரத்தில் ஈடுபடுவது போன்ற வடிவங்களில் பிப்ரவரி 25, முதல் மார்ச் 5 வரை தமிழ்நாடு மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெறுகிறது.

16 ஆம் பக்க தொடர்ச்சி

கலந்துகொண்டு கையெழுத்தியக்கத்தை நடத்தினார். கிண்டி ஐடிஐ கல்லூரியில் ரஞ்சித் தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

### திருச்சி மாநகர்

திருச்சி புத்தூர் பிஷப் மேல்நிலைப்பள்ளி, திருச்சி சட்டக் கல்லூரி, பெரியார் ஈ.வே.ரா அரசுக் கல்லூரி ஆகிய இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநில தலைவர் க.இப்ராகிம், சட்டக் கல்லூரி மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர் செல்வி, ஜெய்லானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பகுதியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. இராமசாமி கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். இதில் திருவேங்கடம், கருப்புசாமி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

### நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கணேஷ் குமார், மாநிலக் குழு உறுப்பினர் புவனேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. எல்.சுந்தரம் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். சத்தியமங்கலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைச் செயலாளர் பிரபு, ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டத்தில் தரங்கை பேராயர் மாணிக்கம் லூத்தரன் கலை அறிவியல் கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலக் குழு உறுப்பினர் பகத்சிங் கலந்துக் கொண்டார்.

### கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பகுதியில் மாவட்ட செயலாளர் பி.கணேஷ் தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் பா.தினேஷ் கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். இதில் இளைஞர் பெருமன்றத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் ஏ.வி.சரவணன், மாவட்ட செயலாளர் கே.ராமசாமி, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் விஜய், மாவட்டத் தலைவர் ராமர், மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் ரகு, சேகுவேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை

சிவகங்கை மாவட்டம் அழகப்பா பல்கலைக்கழகம் மாணவர் விடுதியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத் தலைவர் விக்ரம் கலந்து கொண்டார்.

### வேலூர்

வேலூர் மாவட்டம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத் தலைவர் ஆ.பிரகாஷ், மாவட்டச் செயலாளர் கார்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் வடக்கு

தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்தில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் காரல்மார்க்ஸ், மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் செல்வி ஆகியோர் கலந்து கொண்டு கையெழுத்து பெற்றனர்.

### ஈரோடு தெற்கு

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் ஈரோடு கலை மற்றும் அறிவியல் தன்னாட்சி கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் அமுல் உன்னிகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57
JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# தமிழ்நாடு முழுவதும் மாணவர் பெருமன்றம் 5 கோடி கையெழுத்து இயக்கம்!












தேசியக்கல்விக் கொள்கைக்கு எதிராக, ஒன்றிய பாஜக அரசின் மாணவர் மற்றும் கல்வி விரோதப் போக்கை கண்டித்து ஜனவரி 23 முதல் மார்ச் 23 வரை இந்தியா முழுவதும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் 5 கோடி கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அகில இந்திய வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் சி.ஹெச். வெங்கடாசலம், மே 17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி, உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு, மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன் உள்ளிட்டோர் கையெழுத்திட்டனர்.

## சேலம்

சேலம் மாவட்டத்தில் கையெழுத்து இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் கே.சுப்பராயன் அவர்கள் தொடங்கி வைத்தார். சேலம் அரசு கலைக் மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஐடிஐ தொழில்நுட்ப அரசு கல்லூரி உள்ளிட்ட இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நேதாஜி, மாவட்டத் துணைச் செயலாளர் டி.சந்துரு, மாவட்ட குழு உறுப்பினர்கள் சண்முகபாண்டியன், சேகுவேரா,










கரண், மணி, நாச்சியார், மணி, பாரதி, சுசீந்தர்நாத், செந்தமிழ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவாரூர்

திருவாரூரில் மாவட்ட செயலாளர் ஜெ.பி.வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தில் நாகப்பட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் எம்.செல்வராஜ், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, சிபிஐ மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று கையெழுத்திட்டு தொடங்கி வைத்தனர். இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் துரை அருள்ராஜன், மாவட்டத் தலைவர் சு.பாலசுப்பிரமணியன், மாணவர் பெருமன்ற மாவட்ட பொருளாளர் க. கோபி, மாவட்டத் துணைத் தலைவர் எஸ். சிவனேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் சே. அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து, கோட்டூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு கையெழுத்திட்டார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. பழனிச்சாமி, வை.சிவபுண்ணியம் கே. உலகநாதன், கோட்டூர் ஒன்றிய செயலாளர் செந்தில்நாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருத்துறைப்பூண்டி அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற கையெழுத்து இயக்கம் மாவட்டத் துணைச் செயலாளர் பா.ஆர்த்தி தலைமையிலும், ஞானவேல் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் கல்லூரி நிர்வாகிகள் பொன்னழகன், மார்ட்டின் கலந்து கொண்டனர்.

மன்னார்குடி ராஜகோபால அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தில் கல்லூரி கிளை தலைவர் ஆதித்யன், கிளை செயலாளர் சுமன், மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.சந்துரு தலைமையில் நடைபெற்றது.

## கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற குழு தலைவர் டி.இராமச்சந்திரன் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து ஒசூர் அரசு கலை அறிவியல் கல்லூரி, எம்ஜிஆர் கலை அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத் தலைவர் நிரூபன், ஸ்ரீஹரி, பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாநகர்

மதுரை மாநகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் விக்ரம் கலந்து கொண்டார்.

## மதுரை புறநகர்

மதுரை புறநகர் மாவட்டத்தில் மேலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சந்தைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, தனியார் ஐடிஐ ஆகிய கல்வி நிலையங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத்தலைவர் விக்ரம், மாநில நிர்வாக குழு உறுப்பினர் சேதுபாண்டி, மாவட்டத் தலைவர் ஜெகன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கிரிஷ்பாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர்

திருப்பூர் புறநகர் மாவட்டத்தில் தேவராயம் பாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் முத்துகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தென் சென்னை

தென் சென்னை மாவட்டத்தில் நந்தனம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, கோடம்பாக்கம் மாணவர் விடுதி, மாந்தோப்பு அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஆ.மணிகண்டன், வித்யா, அகிலா, முஜிபுர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மத்திய சென்னை

மத்திய சென்னை மாவட்டம் பச்சையப்பா கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஆ. மணிகண்டன்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.